# சைவநீதி

# SAIVANEETHI


விக்கிரம மார்கழி

DEC. - JAN. 2001




656 Ram Shivlinga Pooja

J.B. KHANNA & Co.,
10, DEVARAJA MUDALI St
MADRAS 600 003.



மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச் செய்த

# திருப்பள்ளியெழுச்சி

## (திரோதான சுத்தி)
## எண்சீர் விருத்தம்

திருச்சிற்றம்பலம்

போற்றியென் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்குழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாயெனை யுடையாய்
எம்பெருமான் பள்ளி எழுந்தரு ளாயே. 1

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்
தொருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருகொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

தொடர்ச்சி பின்புற உள்ளட்டையில்

உ
சிவமயம்
" மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம் "

# சைவநீதி

மலர் 4 விக்கிரம மார்கழி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாதஇதழ் - 9

## அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய்

அடியார் எனப்படுபவர் யார் ? இறைவன் திருவடியை இடைவிடாது சிந்திப்பவர்கள் அடியவர். "நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும் மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும் மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாத்தன்மை யார் எவரோ? அவர் தான் அடியவர்.

நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன் இறைவன். அடியவர் உள்ளத்திலே இறைவன் எழுந்தருளி உள்ளான். "இறைவனோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம். தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பது ஔவையார் வாக்கு, பல வழிகளில் இறையருள் பெற முயல்கின்றார் மணிவாசகர். இறையருள் கிட்டாத நிலையில் இறைவனை அடைவதற்கு ஏற்ற வழியைக் கண்டு கொள்ளுகிறார். அது தான் அடியார் நடுவில் இருத்தல்.

அடியார் நடுவுள் இருந்து அவர்களுக்குச் சேவை செய்வதே பெருந்தொண்டு. அவர்களைப் பணிவது இறை வழிபாட்டிற் கொப்பாகும். அடியார் கூட்டத்திற் சேர்ந்துவிட்டால் அத் தகுதியினாலே இலகுவில் இறையருள் பெற்றுக் கொள்ளலாம்.

பொன்னம்பலத்திலாடும் எமது ஈறிலா முதல்வனே உடையவளாகிய சிவசக்தி உன்னிடத்தே உள்ளீடாக இருக்கிறாள். நீயும் அவளிடையே கலந்திருக்கிறாய். என்னுள் நீவிர் இருவீரும் இருப்பது உண்மையானால் என் விருப்பம் நிறைவேறும் வண்ணம் அடியேன் அடியார் நடுவுள் இருந்தற்குரிய திருவருளைப் புரிய வேண்டும்.

உடையாள் உன்தன் நடுவிருக்கும் உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்ப தானால் அடியேன் உன்
அடியார் நடுவுளிருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

உ
சிவமயம்

# சைவநீதி

## உள்ளே...

1. அடியார் நடுவுள் இருக்கும் அருளைப்புரியாய் ..... 1

2. பவள விழாக் கண்ட நகுலேஸ்வரக்குருக்கள் ..... 3

3. பாவை நோன்பும் திருவெம்பாவையும் ..... 4
- ஸ்ரீமத் அத்வயானந்த சரஸ்வதி

4. தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான் ..... 7
- பண்டிதர் ச. சுப்பிரமணியம்

5. சைவ சித்தாந்த சாத்திர கட்டுரைத் தொடர்
உண்மை விளக்கம் ..... 10
- மெய்கண்டார் அடியவன்

6. திருவெம்பாவை ..... 16
- மட்டுவில் ஆ. நடராசா

7. நடராசப் பத்து ..... 20
- முருகவே பரமநாதன்

8. திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும் ..... 24
- குப்பிழான் ஏ.அனுசாந்தன்

9. திருவாதிரைநாள் ..... 26
- செ. நவநீதகுமார்

10. சைவநெறிப் பாடமும் பயிற்சியும் ..... 27
- சாந்தையூரான்

சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்.

## பவள விழாக் கண்ட நகுலேஸ்வரக்குருக்கள்



### எண்சீர் விருத்தம்

மன்னுபுகழ் சார்நகுலேஸ் வரத்தா னீசன்
மதிசூடும் பெருமான்றன் மலர்ந்தாட் பூசைக்
கென்னநிதந் தன்னையீந்த இணையில் சீரான்
எங்குமிசை வாய்ந்தநகு லேஸ்வ ரப்பேர்ச்
சொன்னநிற வொளிமேனித் தூய நெஞ்சன்
தொண்டனறை சேர்வசனன் தொடர்தன் வாழ்வில்
பன்னுதகைப் பவளவிழாப் பாராட் டேற்றுப்
பல்லாண்டு வாழ்கதமிழ்ப் பாவை போலே.

### வெண்பா

எங்குமிசை பெற்றநகு லேஸ்வரப்பே ரார்குருக்கள்
எங்குமர னாம மியையவைப்போன் - சங்கைப்
பவளவிழாக் கண்டிப் படித்தலத்தில் வாழ்க
தவமுதியர் போலத் தழைத்து.

# பாவை நோன்பும் திருவெம்பாவையும்

- ஸ்ரீமத் சுவாமி அத்வயானந்த சரஸ்வதி அவர்கள்

ஒரு காலத்தில் தமிழ்நாடு உலகிலேயே எல்லாவகையிலும் உயர்ந்த நாடாகத் திகழ்ந்தது. மிகுந்த நாகரிகம் வாய்ந்திருந்தது. செல்வத்தினால் செழித்திருந்தது. கல்வியால் நிறைந்து கலை ஆராய்ச்சி செய்வதையே விளையாட்டாகக் கொண்டிருந்தது. கற்புடைய மாதரே எங்கும் காணப்பட்டனர். சித்தர்கள் பலர் தோன்றினர். அறம் பெருகி நின்றது. பருவ மழை சரிவரப் பெய்தது. மாதம் மும்மாரி தீதறப் பொழிந்தது. மக்களெல்லோரும் மன அமைதி யோடும் மாண்புடனும் கலகம் பயம் முதலியன எவையுமின்றி இன்பமாக வாழ்ந்து வந்தனர். இக்காலத்தில் தமிழ் நாடும் இதனோடு தொடர்புடைய மற்ற நாடுகளும் மேற்கண்ட வைகளுக்கெல்லாம் நேர் மாறுபாடாகவே இருப்பது கண் கூடல்லவா ?

முற்காலத்தில் அவ்வாறு தமிழ் நாடு மேன்மையுற்றிருப்பதற்குக் காரணமென்ன? என்பதை ஆராய்வோம். அக்காலத்தில் கன்னிகையர்க்கென்றே தனிப்பட்ட குரு குலங்கள் பல தமிழ் நாட்டிலிருந்தன. அவைகள் சிறந்த யோகினிகளாலேயே நடத்தப் பெற்றன. அவர்கள் பெயர் மாத்திரத்தை விரும்பி ஆடம்பரமாக நடத்தப் பெறவில்லை. அவைகள் பொதுவாக மக்களையும் சிறப்பாகக் கன்னிகை யர்களையும் பண்பாட்டிலும், கல்வியிலும், பக்தியிலும் சிறந்தவர்களாகச் செய்யும் முறை யிலேயே நடத்தப் பெற்றன. அதனாலேயே அக்கன்னிகா குருகுலங்களின் பெயர்களும் இக் காலத்தில் அறியமுடியாமல் இருக்கின்றன.

இத்தகைய சிறந்த கன்னிகா குருகுலங் களில் பயிற்சி பெற்ற காரணத்தாலேயே அக்காலப் பெண்மணிகள் சிறந்த கல்வியறிவும் பண்பும், பக்தியும், கற்பும் நிறைந்தவர்களாய், இருந்தனர். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, என்னும் நாற்குணங்களும் நாற்படைகளாகவும் ஐம்புலன்களும் நல்லமைச்சர்களாகவும் இருக்க பெண்கள் கற்பரசிகளாகத் திகழ்ந்தனர். அவர்கள் தெய்வபக்தியினாலே சிறந்த கணவன் மார்களைப் பெற்றனர். சிலர் சிறந்த யோகி களாகவும் திகழ்ந்தனர். கற்புடைய மாதர்கள் தெய்வ பக்தியால் சிறந்த புதல்வர்களைப் பெற்றனர்.

கருவாகத் தோன்றிய நாள் முதல் கருப்பையில் வளருங் காலத்திலும் குழந்தைகள் பிறந்து பால் குடிக்குங் காலத்திலும் தாய் மார்களின் பண்பும் அறிவும் பக்தியுமே அக் குழந்தைகளின் உடலிலும் உள்ளத்திலும் உயிரிலும் பாய்ந்து நிறைந்து அக்குழந்தை களை அத்தன்மையுடையவர்களாகவே வளரும்படி செய்தது. அத்தாய்மார்களே பாலப் பருவத்தில் தம்புதல்வருக்குச் சிறந்த கல்வியையும் பக்தியையும் பண்புகளையும் வீரத்தையும் கற்பித்தனர். பின்னர் சிறுமிகளும், சிறுவர்களும் தனித்தனியான குருகுலங்கள் மூலம் சிறந்த கல்விப் பயிற்சிகளைப் பெற்றனர்.

இப்படி வளர்ந்த மக்களையுடையதாயிருந் ததனாலேயே நம் தமிழ் நாட்டிற்கு அக் காலத்தில், இக்காலத்தைப் போல எங்கு பார்த்தாலும் ஏராளமான ஊர்க்காவல் நிலையங்களும் வைத்திய நிலையங்களும், நீதி மன்றங்களும், சமாதானச் சங்கங்களும் தேவையில்லாதிருந்தன. நாடு முழுவதும் மக்கள் கலகம், அச்சம், நோய், வறுமை, முதலியன

> இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்
> செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.
>
> மெய்யுணர்ந்தார் வாய்ச் சொற்கள் இன்சொற்களாம். அவை அன்பு கலந்து வஞ்சனை இல்லாதனவாகும்.
>
> 91

## திருவாதிரை நிவேதனம்

சேந்தனார் இறைவனுக்கு நிவேதித்த பரிகலசேடமே உண்ணும் நியதியுடையவர். ஒரு மார்கழித் திருவாதிரை நாளிலே அவருக்குப் பிட்டுங் களியுமே யமையப்பெற்றன. மனவருத்தத்தோடு அவற்றை இறைவனுக்கு நிவேதித்தனர். அவருடைய மெய்யன்பை விளக்கும் பொருட்டு, நடராசமூர்த்தி, தமது சிற்சபையிலே பிட்டுங் களியும் உதிர்ந்து கிடக்குமாறு செய்தருளினார். இதனைக் கண்ணுற்ற தில்லை மூவாயிரம் அந்தணர்களும், ஏனைய அடியார்களும் எல்லையில்லாத மகிழ்ச்சியுற்று இறைவனுடைய திருவருளின் எளிமையையும், சேந்தனாருடைய அன்பின் அருமையையும் பாராட்டிப் புகழ்ந்தார்கள். அன்று தொட்டு இன்றுவரை மார்கழித் திருவாதிரை தோறும் பிட்டுங்களியும் எம் பெருமானுக்கு சிறந்த நிவேதனங்களாக அமைந்து வருகின்றன.

இன்றிமன அமைதியோடு இன்ப வாழ்வு வாழ்ந்தனர்.

ஒவ்வொரு ஆண்டிலும் வரும் மார்கழி மாதமானது, மக்கள் ஆத்மீகச் சாதனைகளை ஆரம்பித்துப் பழகுவதற்குரிய தெய்வீக மாதமாகும். இது ஒரு வருடத்தையே ஒரு நாளாகக் கொண்ட தேவர்களுக்கு **"பிரம்ம முகூர்த்தம்"** என்று சொல்லப்படும் விடியற் காலை நேரமாகும். முற்காலத்தில் கன்னியர் குருகுலங்களில் பயிற்சி பெற்ற சிறுமிகள் ( 5 வயது முதல் 12 வயது வரையுள்ள பாலிகைகள்) இந்த மார்கழி மாதத்தில் கார்த்தியாயினி தேவி வழிபாடு என்னும் **"பாவை நோன்பு"** நோற்று வேண்டிய பேறுகளைப் பெற்றனர் என்பதைப் பார்ப்போம்.

பாவை நோன்பு நோற்கும் கன்னியர்கள் மார்கழி மாதத்தில் விடிவதற்கு முன்பு தங்கள் தோழிப் பெண்களைத்துயிலுணர்த்தி நீர் நிலைகளுக்கு அழைத்துச் சென்று நீராடி மணலால் கார்த்தியாயினி தேவியையும் பிடித்து வைத்துப் பூசித்துப்பாடி விடியுமுன்பே வீடுவந்து சேர்வார்கள். அம்மாதம் முழுவதும் பொய்களும் கோள்களும் பேசமாட்டார்கள் இயன்றவரை தருமம் செய்வார்கள். தீயவற்றைச் செய்யார்கள். இரவில் பாய் முதலிய படுக்கையில் படுக்காமல் தரையில் தமது துணிகளை விரித்துக்கொண்டு படுத்துத் தூங்குவார்கள். கையையே தலையணையாக வைத்துக் கொள்வார்கள். நகைகளையும் பூக்களையும் கொண்டு தங்களை அலங்கரித்துக் கொள்ள மாட்டார்கள். வெண்ணெய் முதலியன தடவி அலங்காரமாக முடிசடைகளைப் பின்னிக் கொள்ள மாட்டார்கள். மோர், தயிர், பால், நெய், மிகுந்த சத்தும் சுவையும் உடைய உணவுகளை உட்கொள்ள மாட்டார்கள். இவ்வாறான விரதமிருந்து அம்பிகையருளால் விரும்பிய பேற்றை யடைவார்கள். இது அம்பிகை எம் பாவையில் கூறப்பட்டுள்ளது. மாணிக்கவாசகர் பாடிய திருவெம்பாவையில் உலகத்தோற்றத் திற்குரிய சக்திகளின் செயல்கள் குறிக்கப் பட்டுள்ளன. ஆண்டாளம்மையார் பாடிய

*Sweet speech flows from love, is free from deceit, and is the word of the mouth of the virtuous.* 91

திருப்பாவையில் பாவை நோன்பு நோற்கும் கன்னியர்களுக்குக் கண்ணன் உதவியும் செய்வதாகக் கூறப்பெற்றுள்ளது.

ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயது வரையுள்ள சிற்றிளங் கன்னியர்களே இவ்வித மிருந்தார்களென்றால் மற்றக் கற்பரசிகளும் அவர்களுடைய வயிற்றிற் பிறந்த மக்களும் எவ்வாறு வாழ்ந்து இன்புற்று இருப்பார்கள் என்பதை யூகித்தறியலாமல்லவா?

மீண்டும் நமது தமிழ் நாடு அத்தகைய கன்னியர் குருகுலங்களையும் மற்றக் குருகுலங்களையும் ஏற்படுத்தி மறுமலர்ச்சி யடையும்படி செய்ய அம்பிகையைப் பிரார்த்திப் போமாக!

மாதங்களுள் நான் மார்கழி மாதமாக இருக்கிறேன் என்று கண்ணபிரான் கீதையில் மொழிந்துள்ளார். மார்கழி இத்தகைய புனிதம் வாய்ந்த மாதமாகும். ஒரு மார்கழி மாதத்தில் மாணிக்கவாசக அடிகளார் திருவண்ணா மலைக்குச் சென்றிருந்தார். அப்பொழுது இளங்கன்னியர்கள் அவ்வூரில் விடியுமுன் வெகுநேரமிருக்கும் போதே எழுந்திருந்து ஒவ்வொரு வீடாகச் சென்று தமது தோழிப் பெண்களை எழுப்பிப் பாடல்களைப் பாடிக் கொண்டே தடாகத்திற்குச் சென்று நீராடி அம்பிகை பூசையாற்றித் திரும்பி வரும் இனிய காட்சியைக் கண்டார். அவர் உள்ளம் உருகியது. அக் கன்னியர்கள் அவர் கண் களுக்கு நவ சக்திகளாகக் காட்சி அளித்தனர். நவ சக்திகள் ஒவ்வொருவரும் மற்றொவ்வொரு சக்தியைத் துயிலுணர்த்த இப்படி ஒன்பது சக்திகள் சேர்ந்து நீராடிப் பரமனைப் பாடுவது போன்று திருவெம்பாவை என்னும் உள்ளத்தை உருக்கி இறைவனின் அருளைப் பெறவைக்கும் இருபது பாடல்களைப் பாடினார். பக்தி நிறைந்த அடியவர்கள் இன்றும் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் எழுந்து ஒன்று கூடி அத்திருவெம்பாவையைப் பாடிக் கொண்டே தெருக்கள் வழியாகச் சென்று நீராடித் திரும்பி வந்து ஆலய வழிபாடு செய்து தம்தம் இல்லம் செல்கின்றனர். இவ்வாறு ஒவ்வொரு ஊரிலும் நிகழுமேயானால் இறைவன் திருவருளைப் பெற்று நம் நாடு உய்யுமல்லவா ?

இப்பொழுது மாணிக்கவாசகரால் குறிப் பிடப்பட்ட அந்த நவசக்திகள் யார் என்பதைத் கவனிப்போம். பராசக்தியினின்று முண்டான மனோன்மனி முதலிய நவசக்திகள் அபர சக்திகள் ஏன்றும் சொல்லப் பெறுவார்கள். உயிர்களுக்குப் படைப்பாதிகளை நிகழ்த்தி உதவ முதன்முதலில் மனோன்மனி ஆன்மாக் களிடத்தில் அடக்கியுள்ள **சர்வ பூததமனி** என்னும் சக்தியை உளத்திலெழுப்புகின்றார். சர்வ பூததமனி சூரியனிடத்து அடக்கியுள்ள **பலப்பிரமதனி** என்னும் சக்திய்யை உணர்த் துகின்றாள். பலப்பிரமதனி சக்திகளிடம் அடங்கியுள்ள **பலவிகரனி** என்னும் சக்தியை எழுப்புகின்றாள். பலவிகரனி ஆகாசத்தில் அடங்கியுள்ள **கலவிதரனி** என்னும் சக்தியை எழுப்புகின்றாள். காளி தேயுவில் உள்ள **ரௌத்திரியை** எழுப்புகின்றாள். இவ்வாறே ரௌத்திரி அப்புவிலுள்ள சேட்டையையும் சேட்டை பிருதுவியிலுள்ள வாமையையும் எழுப்புகின்றார்கள். இந்த ஒன்பது சக்திகளும் சேர்ந்து **பராசக்தியைப்** போற்றி அவளருள் பெற்று உலகியலடைப்பு முதலிய தொழில் களைச் செய்கின்றனர்.

இத்தகைய திருவெம்பாவைப் பாடல்களை நாம் தினந்தோறும் காலையில் பக்தியோடு பாடி வருவோமேயானால் பராசக்தியாகிய தாயின் அருளைப்பெற்றுப் பரமசிவனாகிய தந்தையுடன் கூடிப் பேரின்பம் பெறலாம்.

அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன் அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

முகம் மலர்ந்து இன் சொல் உடையவனாக இருக்கப் பெற்றால், அது, மனமுவந்து ஒரு பொருளைக் கொடுத்தலைக் காட்டிலும் நல்லதாகும். 92

# தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்

– பண்டிதர் ச. சுப்பிரமணியம்

"பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை நாலும் கலந்து உனக்கு நான் தருவேன்" என்பது யாவரும் அறிந்த தமிழ்மூதாட்டி வாக்கு. சிறு பாலரும், இவற்றையும் இனியசுவையையும் அறிவர். அறிந்த தொன்றைக் காட்டி அதன் மூலம் அறியாததொன்றை இது இப்படியிருக்கும் என உணரவைத்தல் அறிவூட்டும் உபாய வழியாம்.

மணிவாசகப் பெருமான் உபதேச வழியாற் கேட்டும் அநுபவித்தும் அறிந்த சிவானந்தச் சுவையையும் இவ்வாறே எமக்கு அறிவித்த ருளுகிறார். எனவே எல்லோருக்கும் எளிதில் உணரத்தக்க உவமைப்பொருள் மூலம் உணரவைக்கிறார். அவைகளில் தேனும், அமுதும், கரும்பும், விளாங்கனியும், பாலும் வேறு பலவும் காணப்படும். இவற்றில் இயல்பாகவே சுவையானதும், நோய் தீர்க்கும் மருந்தாவதும், உடலுக்கு ஊட்டந்தருவதும் பாலும் தேனுமாம். இவை எவரும் அறிந்த பொருளுமாம். அடுத்து கரும்பும், விளாங்கனியும் அறியப்படத்தக்கன. அமுது சொல்லளவால் அன்றி (ஏட்டுச் சுரைக்காய் போல்) எமது அநுபவத்திற்கு வராதது. யோகப்பயிற்சிச் சாதனைகளிலே முதிர்ச்சிபெற்றவர்கள். தமக்குள் சுவைத்திரு ப்பதன்றிக் காட்டொணாதது.

திருவாசகத்தின் 1ம் பாடல் சிவபுராணத்தில் 46ம், 47ம், அடிகள்.

"கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்"

எனவே பாலும் கற்கண்டும் நெய்யும் தேனும் என நான்கு பொருள், இனியவை இணைத்துக் கூறப்படுகிறது. 63ம் அடியில் "தேசனே தேனார் அமுதே சிவபுரனே" எனத் தேனும் அமுதும் இணைத்துக் கூறப்படுகின்றது. உபநிடதத் திலும் மதுவித்தியா என்றொரு பகுதி உளது. உபநிடத மந்திரம் 72. அதிலே 9 முறைக்கு மேல் மது என்ற சொற்பிரயோகம் வருகிறது. மது என்பது தேன். இனிமை என்ற பொருள் தரும் சொல். அதனைத் தேன் என்ற சொல்லைப் பயன்படுத்தி மணிவாசகம் கூறுகிறது. ஆக மிக அதிமதுரமான பொருள் தேன் என்பது தெளிவாகிறது.

அருணகிரியாரும் "தேனைவடித்து சொரிந் ததோ கொதிபாலுடன் ஒக்கக் கலந்ததோ" என அதிமாதுரியச் சுவைக்கு உவமை யாக்குவர். திருக்குறளிலும் "பாலொடு தேன்கலந்தற்றே" என உவமிப்பர். இவை சிற்றின்பத்தின் இன்சுவை உணர்த்த வந்த உவமை. சிறிய இன்பத்துக்கே – சுவைக்கே – உவமையாயின் பேரின்பத்திற்கு உவமை யாகுமா. எனவே மணிவாசகத்திலே தேனினும் உயர்ந்த "தேனும் அமுதமுமாம்" அறிந்ததும் அறியப்படாததுமான இரண்டையும் இணைத்து இரண்டும் இணைந்த சுவையே ஒப்பாகலாம் என உணர்த்தினர். திருவாசக அமுது எனக் கூறின் எல்லோரும் அச்சுவையை அநு மானித்தல் அரிதாதலாயும் பன்முறை மணி வாசகத்தில் பயின்று வருவதாலும் தேன் என்னும் சொல்லைக் காட்டி உணர்த்துவதற்கு "திருவாசகம் என்னும் தேன் என ஆன்றோர் கூறினர்" அடுத்துவரும் அகவல்களிலே திரு வண்டப் பகுதி என்னும் பாடலிலே 165, 166,167ம் அடிகளில்,

"அடியேற்கு அருளியது அறியேன் பருகியும் ஆரேன்,
விழுங்கியும் ஒல்லகில்லேன்"

Sweet speech with a cheerful countenance is better than a gift made with a joyous mind. 92

என அந்த அற்புதமான தீஞ்சுவையை எவ்வாறு ஊட்டப்பெற்றதென்பதும் அருந்தப் பெற்று நிறைவாகாத நிலையிலேயே தொடர் சுவையாக வருகிறதெனவும் வியக்கின்றார். தொடர்ந்து அந்த மது உண்ணப்பட்டு அதனாலே விளைந்த பெறுபேறு பற்றி விபரிக்கிறார்.

170 -181 வரையுள்ள அடிகள் படிப்பவர்களுக்குத் தேன் வெறி ஏற்றுவன "வாக்கிறந்து அமுதம் மயிர்க்கால் தோறும் தேக்கிடச் செய்தனன்; கொடியேன் ஊன்தழை குரம்பை தோறும் நாயுடல் அகத்தே குரப்பை கொண்டு இன்தேன் பாய்த்தி **நிரம்பிய அற்புதமான அமுத தாரைகள் எற்புத்துளைதொறும் ஏற்றினன்,** உருகுவது உள்ளங் கொண்டு ஓர் உருச்செய்தாங்கு, எனக்கு அள்ளூறு ஆக்கை அமைத்தனன்; ஒள்ளிய கன்னல் கனிதேர் களிறென கடைமுறை என்னையும் இருப்பதாக்கினன்; என்னில் கருணை வான்தேன் கலக்க அருளொடு பராவமுது ஆக்கினன். பிரமன்மால் அறியாப் பெற்றி யோனே" எனவுள்ள இந்தப் பன்னிரு அடிகளுள்ளேயே பலமுறை தேனும் அமுதுமாகிய சொல் பயன்படுத்தப்பட்டமை காணலாம்.

சொல்லொணாத பேரமுத ஊற்று உடம்பிலே உரோமத்துவரம் முழுவதும் செறிந்து தேங்கச் செய்தான்; கொடியேனது ஊனேதழைத்த உடம்பு முழுவதும் நாயிலும் கடையான உடம்பிலே வரம்பமைத்துப் பாத்திகள் செய்து, அவற்றிலே இனிய தேனையே நீர்ப்பாய்ச்சி, அதன் மேலும் நிரம்பிய அற்புதமான அமுத மழையின் பெருக்கை எலும்புத்துளை தோறும் சென்றேறும் படி செலுத்தினான். மெழுகும் வெண்ணையும் போல உருகும் உள்ளமாகிய பொருளையே மூலப்பொருளாகக் கொண்டு என்னுடலை வேற்றுருவாக்கி அமைத்தது போல, எனக்கு அளவிறந்த அன்புமயமான ஆக்கை ஆகுமாறு மாற்றியமைத்தான்; அதனாலே கரும்பையும் விளாங்கனியையுமே உண்ணத்தேடும் யானையைப் போலவே முடிந்த முடிபாகூ என்னையும், சிவானந்த போகத்தையே (பிறவிலக்கி) வேட்டு ஏங்கிக் கிடப்பேனாக ஆக்கினான்; என்னுள்ளே தனது கருணையாகிய மேலான தேன் வந்து கலக்க அதனுடன் அருளோடு இணைந்த மிகமேலான பரமானந்த அமுதாக இயற்றினன்; இந்த அதியற்புதமான சித்துவிளையாடலைச் செய்தருளியவர்

சிதம்பரத்திலே மார்கழித் திருவாதிரையை இறுதியாகக் கொண்டு முதற் பத்து தினங்கள் மகோற்சவம் நடைபெறும். திருவாதிரைக்கு முதல் நாள் இரதோற்சவம் நடைபெறும் அன்று இரவு நடராசப் பெருமான் ஆயிரங்கால் மண்டபத்தில் எழுந்தருளியிருப்பார். அதிகாலை அபிஷேகம் அலங்காரம் என்பன நடைபெற்றுச் சிவகாம சுந்தரி சமேத நடராசப் பெருமான் வீதியுலா வந்து தரிசனம் கொடுப்பார். இது ஆருத்திரா தரிசனம் எனப்படும். இத்தரிசனத்தைக் காண்பதற்கு பல்லாயிரம் பக்தர்கள் இங்கு வந்து கூடுவர்.

வியாக்கிரபாதர், பதஞ்சலி, முனிவர், தேவர், கின்னரர், சித்தர், மருத்துவர், கங்கை முதலிய தீர்த்தங்கள், சமுத்திரங்கள் யாவும் ஆருத்திரா தரிசனத்திற்காக இங்கு கூடுவர். இவர்கள் கிரேதா யுகம் திரேதா யுகம், துவாபரயுகம், ஆகிய மூன்றிலும் சுயரூபத்தில் இருந்து பெருமானைத் தரிசிப்பர் இக்கலியுகத்தில் மானிடருக்குத் தெரியாவண்ணம் மறைந்திருந்து பெருமானைத் தரிசிப்பர்

முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தான்ஆம்
இன்சொ லினதே அறம்.

ஒருவரைக் கண்ட பொழுதே, முகமலர்ச்சியோடு விரும்பி இனிதாக நோக்கி, பின்பு அவர் நெருங்கி வந்ததும், அகமலர்ச்சியோடு கூடிய இனிய சொற்களைச் சொல்லுவதே அறமாகும். 93

யாவரெனில் பிரமவிஷ்ணுக்களாலும் இத்த கையவர் என இன்னும் அறியப்படாதவரா யிருக்கும் சிவபரம் பொருளாம்.

(குரம்பை - 1. உடம்பு 2. பாத்திகள். அடிக் கோடிட்ட "அற்புத...... ஏற்றினன்" என்ற பகுதி, ஊசிமருந்தேற்றும் மருத்துவமுறை அன்றும் இருந்தது என்று ஊகிக்கச் செய்கிறது.)

பண்டைக் காலத்திலே மகான்களாகிய சித்தர்களிடையே அற்புதமான சில சித்திகள் இருந்தன. அவை " தரிசன வேதி" "பரிச வேதி" என வழங்கின. மிருகம், பறவை, மனிதர் என்னும் உயிருள்ளவற்றையன்றி இரும்பு, செம்பு முதலி யவற்றையும் பார்வையாலே தன்னியல்பு விட்டுப் பிறிதொன்றின் இயல்புள்ளதாக்குதல் இப் பாடல் இறுதி அடிகள் கூறும் செய்தி அதனை உணரவைக்கின்றது. உற்று நோக்கும் போது நிணையப்படும்.

மற்றும் உருகும் உள்ளங்கொண்டு ஓர் உருச் செய்தாங்கு என்பதற்கு விளக்கம் தருவது போலவே திருச்சதகம் 21ம் பாடலிலே "உள்ளந் தாள் நின்று உச்சியளவும் நெஞ்சாய் உருகாதால், உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா வெள்ளந்தான் பாயாதால், நெஞ்சம் கல்லாம், கண்ணினையும் மரமாம், தீ வினையினேற்கே. என்று இரங்குகின்றமை காணலாம். உடம்பு முழுவதும் உள்ளமாகிக் கசிந்து உருகவேண்டும், அப்படியே எங்கும் கண்ணாகிக் கண்ணீர் வெள்ளம் பெருக வேண்டும், அங்ஙனமின்றி உள்ளமும் கண்ணும் கனியாத கல்லாயும் கண்கள் உணர்வற்ற மரமாகவும் இருக்கின்றனவே என்பது மணிவாசக சுவாமிகளின் ஏக்கம்.

பரமபதியே பரமாசாரியராய் எழுந்தருளி வந்து ஆட்கொண்ட கைமாறில்லாக் கருணைத் திறத்திற்கு முற்றிலும் சிவபத்திமயமாகி அவ்வழி நிற்றலே நம்பணியாகும். தாம் அந்த நிலை அடையப் பெற்றிலம் என "அழுதால் உன்னைப் பெறலாமே" என்று அறிவறிந்து அடிகளார் இசைப்பாராயின் நாம் எங்கே.

"தொல்லை இரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகமென்னும் தேன்"

என அநுபூதிமான்கள் கூறியதை எண்ணி நாம் அனைவரும் திருவாசகத்தேனை மனவா க்குக்காயம் ஒருங்கிச் சிவனடியே சிந்தித்துப் பாராயணம் செய்துவரின் எம்மையும் பராவமு தாக்குவான்.

*திருவாசகத்தில் தேன் எனுஞ்சொல் எங்கும் தித்திக்கிறது.*

**திருப்பள்ளியெழுச்சி தொடர்ச்சி.....**

புவனியிற் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேயிந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

**Sweet speech flowing from the heart, (uttered) with a cheerful countenance and a sweet look is true virtue.**
**93**

சைவ சித்தாந்த சாத்திரக் கட்டுரைத் தொடர்

# உண்மை விளக்கம்

- மெய்கண்டார் அடியவன்

"உண்மை விளக்கம் உயர் சைவ சித்தாந்த வெண்ணெய்." இவ்வாறு கூறியவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள். மேலும் அவர்கள், "சிவஞானபோத திராவிட பாடியம் இரண்டாஞ் சூத்திரம் தத்துவ விசாரம் சிவாகமசாரம். அதனை உய்த்து உணர்ந்து அறிவதற்கு உறுதவம் வேண்டும்." என்றார்.

சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு, இவற்றிற்குத்துணை புரியும் ஞான நூல்கள் மேலும் பல உள. பதினான்கு சாத்திர நூல்களுள் முதற்கண் கேட்டற்கு உரியது சித்தாந்தத்தின் உண்மை விளக்கமே என்பர் சிலர். அது இரண்டாவதாகக் கேட்டதற்கு உரியது என்பர் வேறு சிலர். கால அடிப்படையில் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் இரண்டும் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதத்திற்கு முற்பட்டவையாகும். சிவஞானபோதம் பதின்மூன்றாம் நூற்றாண்டிற்குரியது. இதே காலப்பகுதியில் தோன்றியவை சிவஞானசித்தியார், இருபா விருப.ஃது, உண்மை விளக்கம் என்பனவாகும். பதினான்காம் நூற்றாண்டிற்குரியவை சிவப் பிரகாசம் முதலிய எட்டுமாகும்.

மெய்கண்டாரின் நேர்மாணவர் நாற்பத் தொன்மரில் இரண்டாவதாக விளங்கியவர் உண்மை விளக்கம் அருளிய திருவதிகை மனவாசகங் கடந்த தேவநாயனார். உண்மை விளக்கம் மெய்கண்ட சந்தான அநுபவத்திரட்டு எனப்படும். இது எளிமையும், இனிமையு முடையது. ஐம்பத்தைந்து வெண்பாக்களைக் கொண்டது. ஈற்றில் உள்ள பின்வரும் வெண்பா நூலாசிரியர் சிறப்புக் கூறுகின்ற சிறப்புப் பாயிரமாகும்.

மன்அதிகை வாழும் மனவா சகங்கடந்தான்
மின்அனைய வாழ்விலுறா மெய்கண்டான் - பன்மறைகள்
வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள்வழுவா
உண்மைவிளக் கஞ்செய்தான் உற்று.

முதலாவதாக, விநாயகப் பெருமானை வணங்கும் காப்புச் செய்யுள் காணப்படுகின்றது. பதினான்கு சித்தாந்த சாத்திர நூல்களுள் பிரதானமானவை காப்புச் செய்யுள்களை உடையவை. சிலவற்றுக்குக் காப்புச் செய்யுள் இல்லாதிருப்பதும் கவனத்துக்குரியதே. அவை அளவாற் சிறிய நூல்கள்.

உண்மை விளக்கக் காப்புச் செய்யுள் சொற்சுவை, பொருட்சுவை மலிந்த பின்வரும் வெண்பாவாகும்.

*பாட்டு 1*

வண்மை தரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா
உண்மை விளக்கம் உரை செய்யத் - திண்மதஞ்சேர்
அந்திநிறத் தந்திமுகத் தொந்தி வயிற்று ஐங்கரனைப்
பந்தமறப் புந்திஉள் வைப்பாம்.

வள் + மை = வண்மை. வள்ளற் தன்மை. உடையன ஆகமங்கள். அவை வைத்த பொருளை வழுவாமல் உரைப்பது உண்மை விளக்கம். உள் + மை = உண்மை. வழுவாத உண்மையை விளக்கமாகச் சொல்வதற்கு விநாயகப் பெருமானைத் தொழுவோம். அவர் செவ்வந்தி நிறத்தர், மதயானை முகத்தர், தொந்தி வயிற்றர், ஐந்து கரத்தர். அவரை எமது பந்தம் அறச் சித்தத்தில் வைத்தல் வேண்டும்.

உண்மை விளக்க நூலின் அமைப்பு ஒரு நாடகத்திலே வரும் இரு கதாபாத்திரங்கள் உரையாடுவது போல அமைந்துள்ளமை இந்நூலின் சிறப்புக்குப் பெரிதும் காரணமாயுள்ளது.

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.

யாரிடத்திலும் இன்புறுத்தும் இன்சொல்லைச் சொல்பவர்க்கு துன்புறுத்தும் வறுமை என்பதே இல்லையாம். 94

சீடர் சில வினாக்களை முன்வைக்கின்றார். ஞானகுரு அவற்றிற்குரிய விடையைக் கூறுகின்றார்.

*பாட்டு 2*

**பொய்காட்டிப் பொய்அகற்றிப் போதாநந்தப் பொருள்ஆம்**
**மெய் காட்டும் மெய் கண்டாய்! விண்ணப்பம் - பொய்காட்டா**
**மெய்யா! திருவெண்ணெய் வித்தகா ! சுத்தவினா**
**ஐயா ! நீ கேட் டருள்.**

மெய்கண்டாய்! மெய்யா! ஐயா! நீ சுத்தவினாக் கேட்டு அருள் என்கிறார் முதலில் மனவாசகங்கடந்தார். அடுத்து அவரே வினாக்களைப் பின்வருமாறு தொடுக்கின்றார். எட்டு வினாக்கள்.

*பாட்டு 3*

**[1] ஆறுஆறு தத்துவம் ஏது? [2] ஆணவம் ஏது? [3] அன்றே தான்**
**மாறா வினை ஏது? [4] மற்று இவற்றின் - வேறு ஆகா**
**நான் ஏது? [5] நீ ஏது? [6] நாதன் நடம் [7] அஞ்செழுத்து?**
**[8] தான் ஏது? தேசிகனே! சாற்று.**

பொய் காட்டிப் பொய் அகற்றிப் போதாநந்தப் பொருள் ஆம் மெய்யைக் காட்டுபவர் மெய்கண்டார். பொய் என்பது தேகம் முதலிய உலகப் பொருள்கள். பொய் அகற்றல் என்பது பாசஞானம் பசுஞானங்களை நீக்குதல். போதம் ஆநந்தப் பொருள் - சச்சிதானந்தப் பொருள். அதுவே மெய்ப்பொருள். மெய் இன்பப் பொருள்.

சீடர் சற்குருவாகிய மெய்கண்டார் முன் எட்டு வினாக்களை வைக்கின்றார். மெய் கண்டார் ஒவ்வொரு வினாவுக்கும் விடை பகருகின்றார். முதலாவது வினா ஆறு ஆறு - முப்பத்தாறு தத்துவம் எவை? இதற்குரிய விடை பதினெட்டு வெண்பாவிலே கூறப் படுகின்றது. இரண்டாம் வினா - ஆணவ மலம் எத்தகையது? மூன்றாம் வினா - வினை கன்மமலம் எத்தகையது? இவை இரணடிற்கும் உரிய விடை ஒரு பாடலிலேயே கூறப்படுகின்றது. நான்காம் வினா - நான் என்னும் ஆன்மா எத்தகையது என்பது. அதன் விடை மூன்று வெண்பாவிலே கூறப்படுகின்றது. ஐந்தாம் - வினா நீ என்னும் குருவாகிய சிவம் பற்றியது. அதற்குரிய விடை மூன்று பாடலில் மெய்கண்டார் கூறுகின்றார். நாதன் நட(ன)ம் எது என்பது ஆறாவது வினா. அதற்குரிய விடை பத்துப் பாக்களில் உள. ஏழாவது வினா, பஞ்சாட்சரம் பற்றியது. அதற்குரிய விடை, ஒன்பது பாக்களில் உள. எட்டாவது வினா, தான் எனப்படும் பேரின்ப நிலை பற்றியது. அதற்குரிய விடை ஆறு பாக்களில் உள.

முப்பத்தாறு தத்துவம் பற்றிய முதலாவது வினாவுக்கு மெய்கண்டார் விடை கூறப் பதினெட்டுப் பாக்களைப் பயன்படுத்துகின்றார். சைவ சித்தாந்த சாத்திரத்தில் மிக முக்கியமான, விரிவான பகுதி முப்பத்தாறு தத்துவ விளக்கமாகும். இது சிவஞானபோதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் ஆகிய மூன்றிலும் இரண்டாம் சூத்திரமாக உள்ளது. சிவஞான மாபாடியத்தின் ஐந்தில் ஒரு பகுதி இதன் விளக்கமாகும். மேலும் சித்தாந்தக் கட்டளை நூல்கள் பலவும் இதன் விளக்க மேயாகும். ஆகவே முப்பத்தாறு தத்துவங்களை நன்கு அறிய இந்நூலின் பதினெட்டுப் பாக்களும் மிக்க துணை புரிபவனவாகும். இவற்றை முதலில் முறைப்படி விளங்கினால் ஏனையவை தானாகவே விளங்கும். இது பற்றியே **பண்டிதமணி** அவர்கள், "உய்த்து உணர்ந்து அறிதற்கு உறுதவம் வேண்டும். அதனால் என்னோர் அனையரும் அதனை எட்டத் தவப்பெருஞ் செல்வர் தந்தது இந்த உண்மை விளக்க உரை விளக்கமே" யென வச்சிரவேல் முதலியார் உரைக்குச் சிறப்புப் பாயிரம் அளித்துள்ளார்.

முதலாவது வினாவுக்கு விடை கூறுமுன் மாணவரை நோக்கிப் பின்வருமாறு மெய் கண்டார் பகருகின்றார்.

*பாட்டு 4*

**உள்ளபடி இத்தை உரைக்கக் கேள்! உன்தனக்கு**
**வள்ளல் அருளால் அன்று வாய்மலர்ந்த - தெள்ளியசீர்**
**ஆகமங்கள் சொன்ன அடைவிலே ஆநந்த**
**யோகம் நிகழ் புதல்வா! உற்று.**

" சிவபெருமான் திருவருளால் அநாதியிலே திருவாய் மலர்ந்து தெளிந்த சீர்த்திமிக்க சிவாகமங்கள் உரைத்த முறைமையிலே

*Sorrow- increasing poverty shall not come upon those who use in all cases pleasure- increasing sweetness of speech.*
*94*

சிவாநந்த யோகத்தில் விளங்குகின்ற ஞானப் புத்திரனே! உள்ளம் உரையோடு பொருந்தி உள்ளவாறு இதனைச் சொல்லுகின்றேன் கேட்பாய்"

இவ்வாறு மேற்படி வெண்பாவுக்குக் காஞ்சி சீலத்திரு ஞானப்பிரகாச பரமாச்சாரியார் உரை அருளியுள்ளார். அவ்விடைத் தொடக்கத்திலே, "மெய்கண்ட தேவநாயனார் அருளிய விடைத் தொடக்கம்" என முதலிலே குறிப்பிட்டுள்ளார்.

மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஐந்தும் பஞ்ச பூதங்கள். இவற்றால் ஆனது உடம்பு. உடம்பிலே உயிர்கள் தங்கியுள்ளன. எனவே முப்பத்தாறு தத்துவங்களில் முதலாவதாக இருபத்துநான்கு ஆன்ம தத்துவங்கள் பற்றி விளக்கம் தரப் பெறுகின்றோம்.

முதலில் ஐம்பூதங்களின் உருவம் கூறப் படுகின்றது. மண், பூமி நாற்கோணம். நீர் - புனல் பிறை வடிவம். தீமுக்கோணம். காற்று - அறுகோணம். ஆகாயம் வட்டமாய் இருக்கும் எனப் பின்வரும் வெண்பா கூறுகின்றது. கால் - காற்று

*பாட்டு 5*

நாற்கோணம் பூமி; புனல் நண்ணுமதியின்பாதி;
ஏற்கும் அனல் முக்கோணம்; எப்போதும் - ஆர்க்கும்
அறுகோணம்கால்; வட்டம் ஆகாயம்; ஆன்மா
உறுகாயம் ஆம் இவற்றால் உற்று.

பஞ்சபூதங்களால் ஆன உடம்பை ஆன்மா உடையது எனக் கூறிப் பின் அவற்றின் நிறமும் எழுத்தும் கூறப்படுகின்றது. மண் - பொன் நிறம், நீர் - வெண்நிறம், தீ - செந்நிறம், காற்று - கரு நிறம், ஆகாயம் - புகை நிறம், அவற்றிற் குரிய பூத சுத்தியிலே உச்சரிக்கப் பெறும் மந்திர எழுத்துக்கள் முறையே ல, வ, ர, ய, அ.

*பாட்டு 6*

பொன் பார் புனல் வெண்மை; பொங்கும் அனல் சிவப்பு;
வன்கால் கருமை; வளர் வானம் தூமம் - என்பார்
எழுத்து ல வ ர ய அ ப்பார் ஆதிக்கு என்றும்
அழுத்தமாய் நிற்கும் அது.

ஒண் புதல்வா! ஆகமம் ஓதும் எனப் பூதங்களின் அடையாளம் பற்றிப் பின்வருமாறு கூறப்படுகின்றது.

*பாட்டு 7*

1 குறிகுலிசம் 2 கோகனதம் 3 கொள் சுவத்தி; 4 குன்றா
அறுபுள்ளி; 5 ஆர் அமுதவிந்துப் - பிறிவு இன்றி
1 மண் 2 புனல் 3 தீக் 4 கால் 5 வானம் மன்னும் அடைவே என்று
ஒண்புதல்வா! ஆகமம் ஓதும்.

குறி - அடையாளம், கோகனதம் - தாமரை, சுவத்தி - சுவத்திகம், விந்து - துளி, குலிசம் - வஜ்ரம்.

பூமிக்குப் பிரமா, நீருக்கு விட்டுணு, தீக்கு உருத்திரன், காற்றுக்கு மகேசன், ஆகாயத் துக்கு சதாசிவன் அதி தெய்வங்கள் எனக்கூறி ஐந்தொழிலும் ஐவர்க்கு உரியன எனப் பின்வரும் வெண்பா கூறுகின்றது.

*பாட்டு 8*

பார்ஆதி ஐந்துக்கும் பன்னும் அதி தெய்வங்கள்
ஆர் ஆர்? அயன் ஆதி ஐவர் ஆம் - ஓர் ஓர்
தொழில் அவர்க்குச் சொல்லுங்கால் தோற்றம் முதல் ஐந்தும்
பழுது அறவே பண்ணுவர்கள் பார்.

நான்முகர் - படைப்பார்: திருமால் - காப்பார்: உருத்திரன் - அழிப்பார்: மகேசர் - திரோபவம் எனும் மறைப்புப் புரிவர்: சதாசிவம் - அருளல் எனும் அநுக்கிரகிப்பர் எனக் கூறும் ஐந்தொழில் முதல்வர் பற்றிப் பின்வரும் வெண்பா கூறுகின்றது.

*பாட்டு 9*

படைப்பன் அயன்; அளிப்பன் பங்கயக்கண் மாயன்;
துடைப்பன் உருத்திரனும்; சொல்லில் - திடம் பெறவே
என்றும் திரோவிப்பர் ஈசர்; சதாசிவரும்
அன்றே அநுக்கிரகர் ஆம்.

நிலம் - கடினமானது, தாங்கும், நீர் - குளிர்ந்தது, பதமாக்கும், தீ - சுட்டு, ஒன்று படுத்தும், வாயு - பரவி அசைந்து திரட்டும், ஆகாயம் - வெளி ஆகி, இடம் கொடுக்கும். இவ்வாறு பஞ்ச பூதங்களின் இயல்பைப் பின்வரும் வெண்பா கூறுகின்றது.

*பாட்டு 10*

மண் கடினமாய்த் தரிக்கும், வாரி குளிர்ந்தே பதம் ஆம்
ஒண்கனல் சுட்டு ஒன்றுவிக்கும்; ஓவாமல் - வண்கால்
பரந்து சலித்துத் திரட்டும்; பார்க்கில் ஆகாயம்
நிரந்தரமாய் நிற்கும் நிறைந்து.

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணிஅல்ல மற்றுப் பிற.

யாரிடத்திலும் பணிவுடையவனாகவும் இன்சொல் கூறுபவனாகவும் இருப்பதே ஒருவனுக்கு அணியாம். மற்ற அணிகள் அணிகள் அல்ல. 95

ஐம்பூதம் + ஐம்பொறி + ஐம்புலன் +ஐந்து விடயங்கள்

| | ஐம்பூதம் | ஐம்பொறி | ஐம்புலன் | ஐந்து விடயம் |
|---|---|---|---|---|
| 1. | மண் | மூக்கு | மணம் | கந்தம் |
| 2. | நீர் | நாக்கு | சுவை | ரஸம் |
| 3. | தீ | கண் | ஒளி | ரூபம் |
| 4. | காற்று | தோல் | ஊறு | ஸ்பரிசம் |
| 5. | வானம் | காது | ஓசை | சப்தம் |

திருக்குறள் நீத்தார் பெருமை கூறும் பொழுது

"சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று
ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு"
என்கின்றது.

மெய்கண்டார் உண்மை விளக்கத்தில் பஞ்சமாபூதம் உன்றனக்கு உள்ளபடி ஓதினோம், கள்ளம் மிகுந்த ஐம்புலனும் மெள்ளவே கட்டுரைக்கில் 1. ஓசை 2. ஸ்பரிசம் 3. உருவம் 4. சுவை 5. நாற்றம் ஆசை தரும் ஐம்புலன் எனக் கூறுகின்றார் என மனவாசகங்கடந்தார் பின்வரும் வெண்பாவைத் தருகின்றார்.

*பாட்டு 11*

**உள்ளபடி மாபூதம் ஓதினோம் உன்தனக்குக்**
**கள்ளமிகும் ஐம்புலனும் கட்டுரைக்கின் - மெள்ளவே**
**ஓசை, பரிசம், உருவம், சுவை, நாற்றம்**
**ஆசை தரும் ஐம்புலனே ஆம்.**

தன்மாத்திரை ஐந்தும் நுண்பூதம் எனப்படும் அவற்றின் நின்றும் தோன்றுவன நிலம் முதலிய ஐம்பூதங்கள். இவை மாபூதம் எனப்படும். சத்த தன்மாத்திரை ஆகாயத்தைத் தோற்றுவிக்கும் காரணமாய்ச் சூக்குமபூதம் எனப்படும். இவ்வாறே இரத, உருவ, கந்த, பரிச தன் மாத்திரைகளுக்கும் ஐம்பூதங்கட்கும் தொடர் புண்டு. ஐம்புலன்களால் வரும் ஐவகை ஆசைகளின் வகையை அறிந்தவரே உலக வாழ்வின் பயன் தெரிந்தவர் என்கிறார் திருவள்ளுவ தேவர்.

அடுத்து வரும் பன்னிரெண்டாம் பாடலிலே மாணவரை நோக்கி, "ஞானேந்திரியங்கள் நன்றா உரைக்கக்கேள்" எனக் கூறி அவற்றிற்கு இடமான பூதங்களும் உடல் உறுப்புக்களும் உரைக்கின்றார். ஞான இந்திரியங்கள் - அறிவுப் பொறிகள். அவை, மெய் வாய், கண்,மூக்குச், செவி, ஆகும். அவற்றின் பெயரே அவற்றிற்கு இடமாய் உடலில் உள்ள உறுப்புக்களுக்கும் பெயராகவுள்ளன. அவை ஊனம் மிகுந்த சுமக்கு பூதங்களை இடமாகக் கொண்டு இழிந்த ஓசை முதலிய புலன்களை அறியும். அவை தொழிற்படும் இடம் செவி, தோல், கண், நா, மூக்கு என்பன. தாலு - நா, அத்தாலு - அந்தநா

*பாட்டு 12*

**ஞானேந் திரியங்கள் நன்றா உரைக்கக் கேள்;**
**ஊனமிகுபூதம் உற்று இடமா - ஈனமாம்**
**சத்தாதியை அறியும், தானம் செவி தோல் கண்**
**அத்தாலு மூக்கு என்று அறி.**

ஐம்பொறிகள் ஐம்பூதங்களை இடமாகக் கொண்டு ஐம்புலனைக் கவரும் இயல்பின ஆகாயத்தை இடமாகக் கொண்டு செவிப்பொறி காது எனும் உறுப்பிலிருந்து ஓசையைக் கவரும். காற்றை இடமாகக் கொண்டு மெய்ப் பொறி தோல் ஆகிய உறுப்பிலிருந்து ஸ்பரிசத்தைக் கவரும். தீயை இடமாகக் கொண்டு கண் எனும் பொறி விழி ஆகிய உறுப்பிலிருந்து சென்று ஒளியைக் கவரும்.

*பாட்டு 13*

**வான் இடமாய் நின்று செவி மன்னும் ஒலியதனை**
**ஈனம் மிகும் தோல் கால் இடமாக - ஊனப்**
**பரிசம்தனை அறியும் பார்வையின்கண் அங்கி**
**விரவி உருவம் காணும்மே . (அங்கி - தீ)**

நா ஆகிய பொறி நீரை இடமாகக் கொண்டு வாயினில் நாக்கின் முனையில் இருந்து சுவையை அறியும். மண்ணை இடமாகக் கொண்டு மூக்கு ஆகிய பொறி உறுப்பாகிய மூக்கு முனையிலிருந்து மணத்தைக் கவரும். இவ்வாறு சிவாகமங்களில் கூறப்பட்டன.

*பாட்டு 14*

**நன்றாக நீர் இடமா நாஇரதம் தான் அறியும்**
**பொன்றா மணம் மூக்குப் பூ இடமா - நின்று அறியும்**
**என்று ஓதும் அன்றே இறை ஆகமம் இதனை**
**வென்றார் சென்றார் இன்ப வீடு.** பூ - பூமி

*Humility and sweetness of speech are the ornaments of man, all others are not ( ornaments). 95*

திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தில்

"பொறிவாயில் ஐந்து அவித்தான் பொய்தீர்
ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ்வார்"

எனக் கூறியிருப்பது மனங்கொளத் தக்கது. ஐம்பொறிகளை அடக்கினால் அழியாத அமரவாழ்வு வாழலாம்.

கன்ம இந்திரியங்கள் ஐந்து. அவை செயற் பொறிகள். ஐம்பூதங்களை இடமாகக் கொண்டு அவை செயற்படுபவன என்பதை அடுத்து "கண்ணுதல் நூல்" - சிவாகமம் ஓதியிடும் எனக் கூறுகின்றது அடுத்துள்ள வெண்பா.

*பாட்டு 15*

**கண்ணுதல் நூல் ஓதியிடும் கன்மேந் திரியங்கள்
எண்ணு வசனாதிக்கு இடமாக - நண்ணியிடும்
வாக்குப் பாதம் பாணி மன்னு குதம் உபத்தம்
ஆக்கருதும் நாளும் அது.**

கன்மேந்திரியங்களாகிய தொழிற் கருவிகள் ஐந்து. 1.வாக்கு - வசனிக்கும்: 2. கால் - போகும், வரும்: 3. கை - ஏற்கும், இடும்: 4. குதம் - மலம் விடும்: உபத்தம் - விந்து விடும்.

வாக்கு என்னும் தத்துவம் ஆகாய தத்து வத்தை இடமாகக் கொண்டு பேசுதல் நிகழா விடில் ஊமைத் தன்மை ஏற்படும்.

கால் என்னும் தத்துவம் காற்றை இடமாகக் கொண்டு நடத்தல் , ஓடல் ஆகியன செய்யா விடில் பாரிசவாத நோய் ஏற்படும்.

கை என்னும் தத்துவம் தீ என்னும் தத்து வத்தை இடமாகக் கொண்டு செயற்படு கின்றது. குதம் நீர் எனும் தத்துவத்தை இடமாகக் கொண்டது. உபத்தம் என்னும் தத்துவம் நிலம் எனும் தத்துவத்தை இடமாகக் கொண்டதாகும்.

இவ்வாறு கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஐம்பூதங்களுடனும் ஐந்து உடல் உறுப்புக் களுடனும் ஐவகைச் செயல்களுடனும் தொடர்புடையனவாகும். இதனைப் பின்வரும் வெண்பா விளக்குகின்றது.

*பாட்டு 16*

**வாக்கு ஆகாயம் இடமா வந்து வசனிக்கும்; கால்
போக்கு ஆரும் காற்று இடமா; புல்கிஅனல் - ஏற்கும்
இடும்கை; குதம் நீர் இடமா மலாதி
விடும்; பார் இடம் உபத்தம் விந்து.**

பதினேழாம் வெண்பாவில் குரு பின்வரு மாறு சீடர்க்குக் கூறுகின்றார்.

*பாட்டு 17*

**அந்தக் கரணம் அடைவே உரைக்கக்கேள்
அந்தமனம் புத்தி உடன் ஆங்காரம் - சிந்தைக்இவை
பற்றியது நிச்சயித்துப் பல்கால் எழுந்திருந்து அங்கு
உற்றது சிந்திக்கும் உணர்.**

அந்தக் கரணங்கள் உட்கருவிகள். அவை நான்கு. செயலும் நான்கு. மனம் - பற்றும். புத்தி - நிச்சயிக்கும்: அகங்காரம் - எழுந்திருக்கும். சித்தம் - சித்திக்கும்.

மனம், புத்தி, அகங்காரம், சித்தம் நான்கு உட்கருவிகளுள் முதல் மூன்று நிலையும் பிழைபடின் சித்தத் தெளிவும் பிழைபடும்.

இது வரை ஐந்து முதல் பதினேழு வரை ஆன்ம தத்துவம் இருபத்துநான்கும் உணர்த் தப்பட்டன. அவையாவன பூதம் - ஐந்து: புலன்கள் - தன்மாத்திரைகள் - ஐந்து: ஞானேந் திரியங்கள் - ஐந்து: கன்மேந்திரியங்கள் ஐந்து: அந்தக் கரணங்கள் - நான்கு: ஆகவே ஆன்ம தத்துவம் இருபத்துநான்கு. பின்னர் வித்தியா தத்து வங்கள் கூறப் படுகின்றன. அதுபற்றிய வெண்பா பின் வருமாறு;

*பாட்டு 18*

**ஓதியிடும் நலாலாறும் உற்று ஆன்ம தத்துவம் என்று
ஆதி அருள் நூல் அறையும் காண் - தீது அறவே
வித்தியா தத்துவங்கள் தம்மை விளம்பக் கேள்
உத்தமனே நன்றா உனக்கு.**

வித்தியா தத்துவங்கள் ஏழு. அவை 1) காலம் 2) நியதி 3) கலை 4) வித்தை 5) அராகம் 6) புருடன் 7) மாயை.

அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி இனிய சொலின்.

பிறர்க்கு நன்மையானவற்றை ஆராய்ந்தறிந்து அவற்றைச் செவிக்கு இனிதாக ஒருவன் சொல்வானானால் அவனுக்கு தீவினைப் பயன் தேய நல்வினைப் பயன் பெருகும். 96

*பாட்டு 19*

காலம், நியதி, கருதும் கலை, வித்தை
ஏல அராகம், புருடனே மாயை - மால அற ஏழ்
சொன்னோம் அடைவாகச் சொன்ன இவை தம் உண்மை
உன்னி உரைக்க நாம் உற்று.

*பாட்டு 20*

எல்லை பலம் புதுமை; எப்போதும் நிச்சயித்தல்;
அல்லல் தரும் கிரியை; ஆன்மாவுக்கு; - ஒல்லை
அறிவு; ஆசை; ஐம்புலனும் ஆரவரும் காலம்
குறியா மயக்கு என்று கொள்.

1. கால தத்துவம் - எல்லை பலம் புதுமை செய்யும். 2. நியதி தத்துவம் - கன்மத்தை எப்போதும் நிச்சயிக்கும். 3. கலை - உயிரின் கிரியா சக்தியையும், 4. வித்தை - ஞான சக்தியையும், 5. அராகம் - இச்சா சக்தியையும் விளக்கும். 6. புருட தத்துவம் - ஆன்மா மேற்கூறிய ஐந்துடன் கூடி ஐம்புலனை நுகரும் நிலையாகும. 7. மாயை - உயிர்க்கு மயக்கும் நிலையைச் செய்யும்.

இதுவரை, வித்தியா தத்துவங்கள் ஏழும் சொன்னோம் எனக் கூறி சுத் தத்துவங்கள் சொல்லக் கேள் எனக் குரு பின்வருமாறு சொல்லுகின்றார்.

*பாட்டு 21*

வித்தியா தத்துவங்கள் ஏழும் விளம்பினோம்
சுத்தமாம் தத்துவங்கள் சொல்லக்கேள் - நித்தமாம்
சுத்தவித்தை , ஈசுரம், பின் சொல்லும் சதாசிவம் நற்
சக்தி, சிவம் காண் அவைகள் தாம்.

1. சுத்தவித்தை, 2. ஈசுரம், 3. சதாசிவம், 4. சக்தி, 5. சிவம் என்னும் ஐந்தும் சுத்த தத்துவங்கள். இவற்றைச் சிவ தத்துவம் எனவும் கூறுவர். 1. சுத்தவித்தியா தத்துவம் - கிரியை குறைந்து ஞானம் மிக்க நிலை. 2. ஈசுர அல்லது மகேசுர தத்துவம் - ஞானம் குறைந்து கிரியை மிக்க நிலை. 3. சாதாக்கியம் அல்லது சதாசிவ தத்துவம் - ஞானமும் கிரியையும் ஒத்து நின்ற நிலை. 4. சக்தி தத்துவம் - கிரியை மாத்திரமாய் இருப்பதொரு நிலை. 5. சிவ தத்துவம் - ஞானம் மாத்திரமாய் இருப்பதொரு நிலை.

*பாட்டு 22*

சுத்த வித்தை ஞானமிகும்; தொன்மையாம் ஈசுரம்தான்
அத்தன் தொழில் அதிகம் ஆக்கியிடும்; - ஒத்தல்இவை
சாதாக்கியம் என்றும்; சக்தி சிவம் கிரியை
ஆதார ஞானஉரு வாம்.

இது வரையும் மாயையின் காரியங்களான முப்பத்தாறுதத்துவங்களையும் முறையாகக் கூறினோம். இனி, உயிரை விட்டு நீங்காமல் வரும் ஆணவம், கன்மம் என்னும் இரு மலங்களின் இயல்பை உரைப்போம் என்கிறார் குரு.

தொடரும்

சிதம்பரத்தில் திருவாதிரை மகோற்சவ காலத்தில் தேர்த்திருவிழா அன்று தேர்ச்சில்லு சேற்றில் புதைந்து தேர் ஓடாது தடைப்பட்டடு நின்றது. ஓடாது நின்ற தேரை ஓடச் செய்வதற்குச் சேந்தனார் திருப்பல்லாண்டு பாடினார். பதின்மூன்று பாடல்களால் இறைவனைப் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்திப் பாடினார் சேந்தனார். தேர் தடையின்றி ஓடியது. ஒன்பதாந் திருமுறையில் உள்ள திருப்பல்லாண்டின் பன்னிரண்டாம் பாடலில் திருவாதிரை விழா பற்றிக் கூறியுள்ளார்.

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில் அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி இரவியும் இந்தினும்
தேரார் வீதியிற் தேவர் குழாங்கள் திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும் பல்லாண்டு கூறுதுமே.

*If a man while seeking to speak usefully, speaks also sweetly, his sins will diminish and his virtue increase.*

*96*

# திருவெம்பாவை

- மட்டுவில் ஆ.நடராசா

மனித வருடமொன்று தேவர்களுக்கு ஒரு நாள் ஒரு மாதம் தேவர்களுக்கு இரண்டு மணித்தியாலம். இதன்படி மார்கழி மாதம் தேவர்களுக்குப் புலரிக் காலமாயிருக்கும். இக்காலத்தில் தேவாதி தேவனாகிய சிவனைத் துயிலெழுப்பும் பாவனையாகச் சிவாலயங்களில் திருப்பள்ளியெழுச்சி பாடப்படும்.

"போற்றியென் வாழ்முதலாகிய பொருளே, புலர்ந்தது" என்று திருப்பள்ளியெழுச்சி பாடத் தொடங்கிய மாணிக்கவாசக சுவாமிகள், ஒவ்வொரு திருப்பள்ளியெழுச்சிப் பாடலையும் "பள்ளி எழுந்தருளாயே" என்னுஞ் சொற்றொடர் கொண்டு முடித்தருளினார்.

பள்ளியெழுச்சிப் பாடல்கள் சிவாலயங்களில் தினந்தோறும் பாடத்தக்கன. ஆனாலும் அப் பாடல்கள் திருவெம்பாவைக் காலத்தில் சில ஆலயங்களில் மாத்திரமே பாடப்படுகின்றன.

இவ்வாண்டு திருவெம்பாவைப் பூசை ஆரம்பமாகுந் தினத்தில் இலங்கை நேரப்படி 6.59 க்குச் சூரியன் உதிக்கும். எனவே அன்று அதி காலை 4.59 க்கு புலரிக்காலம் ஆரம்ப மாகின்றது. திருவெம்பாவைப் பூசையின் இறுதி நாளன்று சூரியோதயம் 7.03 க்கு நிகழும். அன்று அதிகாலை 5.03 க்குப் புலரிக்காலம் ஆரம் பமாகும். புலரிக்காலத்தில் ஆலயங்களில் திருப்பள்ளியெழுச்சி பாடப்படும். அதன் பின்பே திருவெம்பாவைப் பூசை நிகழும். இப்பூசை நிகழும் போது மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவெம்பாவைப் பாடல்களைப் பாடுவது வழக்கம்.

மேற்கூறப்பட்டவை மாணிக்கவாசக சுவாமிகள் கூறும் மார்கழி நீராடல் எந்த நேரத்தில் நிகழந்த தென்பதை உய்த்துணர்வ தற்குதவலாம். மார்கழி நீராடச் செல்லும் பெண்பிள்ளைகள் ஒருவரையொருவர் துயி லெழுப்புவது போலவும் இறைவனைப் புகழ்ந்து பாடிப்பாடி நீராடுவதாகவும் பாவனை செய்து பாடப்பட்டது திருவெம்பாவை.

இப்பாடல்கள், சிருட்டியாரம்பத்தில் சிவசத்திகள் ஒன்றையொன்று தோற்று விப்பதாகப் பாவனை செய்து பாடப்பட்டதென்பர் சிலர்.

மலத்தினால் மறைப்புண்டிருக்கும் ஆன் மாவுக்குச் சிவபுண்ணிய விசேடங் காரணமாக இருவினை யொப்பும் ஆன்மாவின் அறிவை மறைக்கும் மலசத்தி தேய்தலாகிய மலபரி பாகமும் நிகழும். அதனால் அதுவரை ஆன்மாவைப் பற்றிய மலத்துக்கும் பின்னாக நின்று, ஆன்மாவை ஓடிமீள்கென ஆடல் பார்த் திருந்த திரோதான சத்தி முன்னிலையாய் அருட்சத்தியாய் ஆன்ம அறிவின்கட் பதியும். சிவசத்தி ஆன்ம அறிவின்கட் பதிதல் சத்திநி பாதம் எனப்படும்.

சத்திநிபாதர்களுக்கே குருவின் உபதேசங் கிடைக்கும், மலநீக்கம் உண்டாகும், ஞானம் உதிக்கும். ஞானமுதிக்கப்பெற்ற ஆன்மா வீட்டை அடையும். இதுவே ஆன்மா செல்ல வேண்டிய நெறியாகும். இந்நெறியிற் சேரவாரீர் செகத்தீரே என அனைவரையும் அழைப்பதே திருவெம்பாவைப் பாடல்களின் உண்மைக் கருத்தென்பர் சிலர்.

"மலவி ருளூற் றுறங்காமன் மன்னுபரி பாகருட்
செலமுழுக வருகவெனச் செப்புதிரு வெம்பாவை" ...என்று கூறுகிறது திருவாசக உண்மை.

இவ்வுண்மையின்படி பார்த்தால், திருவெம் பாவைப் பாடல்களில் இருள் மலத்தையும், துயிலுதல் மலத்தில் அழுந்துதலையும் பொய்கை திருவருளையும் நீராடுதல் திருவருளில் மூழ் குவதையுங் குறிக்குமெனக் கொள்ளலாம்.

நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.

பிறர்க்கு நன்மை செய்து இனிமைப் பண்பிலிருந்து நீங்காத சொற்கள், சொல்லுவோனுக்கும் இன்பம் தந்து நன்மை விளைவிக்கும். 97

இப்பாடல்களில் சிவபெருமானது தடத்த சொரூப இலக்கணங்களும் ஆன்மாக்களின் வேறுவேறு பக்குவ நிலைகளும், சைவ வாழ்க்கை முறையும் கூறப்படுகின்றது.

திருவெம்பாவைப் பாடலின் தொடக்கத்தில் **"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதி"** என்னுஞ் சொற்றொடர் இடம் பெறுகின்றது. சோதி - ஒளி.

இருள் அறியாமையைச் செய்யும். ஒளி விளக்கஞ் செய்யும். ஒளியின் துணையின்றி எம்மால் எப்பொருளையும் அறிய முடியாது. இவ்வுலகிற் காணப்படும் ஒளிகளெல்லாம் வரையறைக்குட்பட்டவை. நாம் காணும் ஒளிகளுட் பேரொளியாகிய சூரியன் கூடத் தோன்றி மறைகின்றான். சூரிய ஒளி எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் ஒரே சீராகக் காணப்படுவதில்லை. பூமியின் ஒரு பகுதியிற் சூரிய ஒளி காணப்படும் போது மறுபக்கத்தில் இருள் சூழ்ந்திருக்கிறது. இதனால் சூரிய ஒளி வியாபகப் பொருளல்ல என்பதை அறிகின்றோம். இறையொளி வரையறுக்கப்படக் கூடிய ஓரிடத்தில் இருப்பதல்ல. இறையொளி எங்கும் நிறைந் திருப்பது. எங்கும் நிறைந்த பேரொளியி னாற்றான் எல்லா ஆன்மாக்களுக்கும் சமகாலத்தில் அறிவிக்கமுடியும்.

சூரியன் எத்தனை ஆண்டுகளுக்கு முன் தோன்றியதென்பதை விஞ்ஞானிகள் கணிக் கிறார்கள். சூரியனுக்குத் தொடக்கம் உண்டு என்பதை ஒப்புக்கொண்டால் அதற்கு முடிவும் உண்டென்பதை ஒப்புக்கொண்டேயாக வேண்டும். இறைவன் ஒருவனே ஆதியந்தம் இல்லாதவன். என்றுமுள்ள இறைவனால் மாத்திரமே ஆன்மாக்களுக்கு இறவாத பேரின்பப் பெருவாழ்வைக் கொடுக்க முடியும். எங்கும் நிறைந்த பேரொளியினாற்றானே ஒவ்வொரு ஆன்மாவும் செய்யும் நல்வினை தீவினைகளை யறிந்து வினைப் பயனை அவ் வவ் ஆன்மாவுக்கு ஊட்டமுடியும்! இவ்வாறு காலத்தாலும் இடத்தாலும் வரையறை செய்ய முடியாத இறைவனது இயல்புகளையெல்லாம், ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி என்னும் ஒரேயொரு சொற்றொடரால் உணர்த்திய மாணிக்கவாசக சுவாமிகள், தொடர்ந்து இறைவனைப் பற்றிக் கூறுங் கூற்றுக்களை நோக்குவோம்.

அவன் சிவலோகன், சிற்றம்பலத்துள் நின்று திருநடனஞ் செய்பவன். தன்னை நினைப் போருக்கு நினைக்குந்தோறும் அமுதம் போல இனிமையைச் செய்பவன். விண்ணுலகஞ் செல்வதற்குத் தடையாயிருக்கும் பிறவித் துன்பத்தைத் தீர்க்கும் மருந்துந் தீர்த்தமும் போன்றவன். அவன் வேதங்களாற் புகழப்படும் பெரியோன். திருமாலொடு நான்முகனுங் காணா மல்ல, மண்ணவர்க்கும் விண்ண வர்க்கும் பிறருக்கும் அறிதற் கரியவன், சுதந்தரன், மனவாக்குக் கெட்டாதவன், கருணை காரணமாக வலிந்து வந்து ஆன் மாக்களை ஆட்கொள்பவன், ஊழிமுதல்வன், உமைபாகன், பலவேறு அருட்டிருமேனிகளைக் கொள்பவன், பழமைக்குப் பழையவன், புதுமைக்குப் புதியவன், தீயைப் போன்ற செந்நிற மேனியை உடையவன், அனலேந்தி ஆடுபவன், வெண்ணீற்றை உத்தூளனமாகப் பூசியி ருப்பவன், கொன்றை மாலை புனைபவன், அவனுடைய பாதத் தாமரைகள் பாதாள உலகங்களைக் கடந்தும் திருமுடி அண்டங் கடந்தும் விளங்கும்.

அவன் விண்ணையும் மண்ணையும் மற்று முள்ள அண்டங்களையும் காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடுபவன். கலப்பினால் விண்ணாயும் மண்ணாயும் நிற்பினும் பொருட் டன்மையால் அவற்றின் வேறானவன்.

பெண்ணாகி ஆணாய் அலியாய் இன்ன தன்மையனென் றறியொணா இயல்புடன் விளங்குபவன் என்கிறது திருவெம்பாவை.

இன்ன தன்மையனென் றறியொணா இயல்பினாற் போலும் வேதங்கள் அவனை "தத்" (அது) என்று சுட்டுகின்றன.

ஆன்மாக்கள், ஆணவமலம் மாத்திரமுடைய விஞ்ஞானகலர், ஆணவ மலமும் கன்மமலமு முடைய பிரளயாகலர், ஆணவம் கன்மம் மாயை

*That speech which, while imparting benefits, ceases not to please will yield righteousness (for this world) and merit (for the next world)* 97

என்னும் மூன்று மலமுடைய சகலர் என மூவகைப்படும்.

சகலர், சத்திநிபாத நிலைக்கேற்ப மந்ததர, மந்த, தீவிர, தீவிரதர சத்திநிபாதர் என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்படுவர். இவர்களிடம் விளங்கும் சத்திநிபாதக் குறிகள் பற்றிக் கூறுகின்றது திருவெம்பாவை.

நீராடச் செல்வதற்காகப் புலரிக் காலத்திற் றுயிலெழுந்து, சிவனைப் போற்றித் துதிக்கும் பாடல்களைப் பாடிக் கொண்டு. அதுவரை நித்திரை விட்டெழாத நீராடச் செல்லுந் தம் தோழியரைத் துயிலெழுப்பச் சென்றவர்களில் ஒருத்தி, துயிலெழாத தன் தோழியை நோக்கி

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்" என்று கேட்கிறாள்.

இன்னொருத்தி, துயிலெழாத இன்னொரு பெண்ணை நோக்கி,

"படிறீ கடைதிறவாய், சிவனே சிவனே யென்று நாம் ஓலமிடினும் நீ எழும்புகின்றா யில்லையே. அடி; மான்போன்ற பெண்ணே, நாளை வந்து உங்களை நானே எழுப்புவன் என்று சொன்னாயே. நீ சொன்னபடி செய்தாயா? உனக்கு வெட்கமில்லையா? இன்னும் விடியவில்லையா? வான்வார் கழல்பாடி வந்தோர்க்கு உன் வாய்திறந்து விடைகூறு. உள்ளம் உருகி, உடம்புருகி உனக்கும் எமக்கும் எல்லோர்க்கும் தலைவனாகிய சிவனைப்பாடு. சிவ சின்னங்கள் ஒலிப்பக் கேட்டவுடன் வாய்திறந்து சிவ சிவ என்று சொல்லும் நீ, தென்னா என்பதன் முன்பே தீ சேர் மெழுகொத்துருகும் நீ; இன்னுந் துயிலெழுகின்றாயில்லையே. என்னானை என்னரையன் இன்னமுதென்று நாம் சொல்லு வதைக் கேள். அதைக் கேட்டுக் கொண்டும் துயில்கின்றாயே! வன்னெஞ்சுடைய அறிவிலி களைப் போல எதுவுஞ் சொல்லாமற் கிடக்கின் றாயே. இது என்ன நித்திரை!" என்று சொல்லிச் சொல்லித் துயில் எழுப்புகிறாள். துயில்பவளி டமிருந்து பதிலேதும் வரவில்லை.

மொய்யார் தடம் பொய்கையில் மூழ்கித் திளைக்க விரைந்து செல்லாமல் துயிலும் இப் பெண்களின் நிலை போன்றது. அருள் வழியில் விரைந்து செல்லாதிருக்கும் மந்ததர சந்திநி பாதர்களின் நிலை.

தோழியர் துயிலெழாத இன்னொருத்தியைத் துயிலெழுப்பும் நிகழ்ச்சி வருமாறு:

தோழியரில் ஒருத்தி:- ஒண்ணித்தில நகையாய் இன்னம் புலர்ந்தின்றோ?

துயில் பவள்:- வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ?

தோழியரில் ஒருத்தி :- எண்ணிக் கொடுள்ளவா சொல்லுகோம். அவ்வளவும் கண்ணைத் துயின்றவமே காலத்தை போக்காதே?

தோழியரில் வேறொருத்தி:- யாம் எண்ண மாட்டோம். நீயே வந்து எண்ணிக் குறையில் துயில். இவ்வாறாக அவ்வுரையாடல் தொடர்கின்றது.

இவ்வுரையாடலின் மூலம் மந்த சத்திநிபாத நிலையை விளக்குகிறது திருவெம்பாவை.

இன்னொரு பெண் நித்திரை செய்து கொண்டிருக்கிறாள். நீராடச் செல்லும் பெண்கள் ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியைப் பாடிக் கொண்டு செல்கின் றார்கள். பாட்டொலி துயில்பவளின் செவி களைச் சென்று சேர்கின்றது. துயின்றவள் துயிலெழுந்தாள் விம்மி விம்மி அழத் தொடங் கினாள். துயிலெழுப்பச் சென்ற பெண்கள் அவளுடைய நிலையை அவதானித்தார்கள்

"மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதாரமளியின் மேனின்றும் புரண்டிங்கன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசு..."

என்று கூறி வியந்தார்கள். இங்கு குறிப்பிடப் பட்டவளின் நிலை, மெய்தான் அரும்பி விதிர்

சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.
பிறரை வருத்தாத இனிய சொல், ஒருவனுக்கு மறுமையிலும் இம்மையிலும் இன்பம் தரும். 98

விதிர்த்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி நிற்கும் பத்தி வைராக்கிய நிலை. இந்நிலை தீவிர சத்திநிபாத நிலைக்கு உதாரணம்.

சத்திநிபாதத்தின் இறுதிநிலை தீவிரதர சத்தி நிபாதம். பிரிவாற்றாமை காரணமாக தன்னை உடனே ஆட்கொண்டருள வேண்டுமென இறைவனை வேண்டும் நிலை இந்நிலை. இந்நிலையை,

"ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையே லோரெம்பாவாய்"

என்னும் அடிகளாற் குறிப்பிடுகின்றது திருவெம்பாவை.

குருந்தமர நீழலில் தீட்சை செய்த குருவும் சீடரும் தம்மைத் தவிக்கவிட்டு மறைந்த ருளியபோது மாணிக்கவாசக சுவாமிகள் இருந்தநிலை இந்நிலை.

இவ்வாறு சத்திநிபாத நிலையைப் பற்றிக் கூறும் திருவெம்பாவை, சிவநெறியில் நிற்போர் எப்படி வாழவேண்டுமென்பது பற்றியும் கூறுகிறது.

சிவனை வணங்குவோர் சிவனடியார் களையும் வணங்கவேண்டும். சிவனடியார் களுக்குத் தொழும்பாய்ப் பணி செய்ய வேண்டும். ஒவ்வொரு நாயனாருடைய பெயரையுங் கூறி, அவருக்குத் தான் அடியவன் என்று திருத் தொண்டர் தொகை பாடியதன் மூலம் இச் சங்கம வழிபாட்டின் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றார் சுந்தரர்.

"உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தான் பணிவோம்..."

என்று நீராடும் பெண்களின் கூற்றாகத் திருவெம்பாவை பாடிய் மாணிக்கவாசக சுவாமிகள், அவ்வளவில் அமையாது, "ஆங் கவர்க்கே பாங்காவோம்" என்று கூறி அவர்களோடிணங்கியிருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறார்.

திருமணஞ் செய்யும் போதும் இணங்கக் கூடியவர்களையன்றி பிணங்கக் கூடிய வர்களைத் திருமணம் செய்யக்கூடாது. அதனால் மார்கழி நீராடும் செல்வச் சிறுமியர் சிவனடியார்களையே திருமணஞ் செய்வர். சிவனடியார் ஒருவரைத் திரு மணஞ் செய்து அவரைத் தன்கணவனாக ஏற்றுக் கொண்ட பெண் அவ்வுறவு காரணமாக தன் கணவன் ஒரு சிவனடியான் என்ற கருத்தை மாற்றிக் கொள்ள மாட்டாள். அதனால் கணவன் மனைவி என்ற உறவையுங் கடந்து நின்று, அவர் சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வாள். இத்தகைய அடியார்க் கடியராம் பேறு இறை வனிடம் வேண்டிப் பெறத்தக்கது இக் கருத்தையே.

"உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கண ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையை எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோ மேலோ ரெம்பாவாய்"

என்று கூறுகின்றது திருவெம்பாவை

மேலும் எம்மை உடையானது பொற் பாதங்களை ஏத்தவேண்டும். சிற்றம் பலத்தைப் பாடவேண்டும். வேதப் பொருளாய் விளங்கு பவனாகிய சிவனைப் போற்றித் துதிக்க வேண்டும். அவன் சூடும் கொன்றை மாலையை பாடவேண்டும். பேதித்து நம்மை வளர்த் தெடுக்கும் பெய்வளையாகிய உமையம்மையின் பாதத் திறம்பாடி ஆடவேண்டும். பிறந் திறந்துழலும் சிறு தெய்வங்களாகிய தேவர்களை வணங்கக் கூடாது என்பன போன்ற அறிவுரை களைக் கூறுகின்றது திருவெம்பாவை.

திருவெம்பாவை பாடல்களைக் கற்று, கற்றாங்கொழுகுவோருக்கு, அன்னை அடித் தாலும் குழந்தை தன் தாயிடமே தஞ்ச மடைவது போல நாமும் அம்மையப்பனாகிய சிவனையே தஞ்சமடைய வேண்டும். நாம் சிவனடியாரோடிணங்கி இருத்தல் வேண்டும். நாம் செய்யும் செயல்களை அவன் அருள்வழி நின்று செய்யவேண்டும்; எங்கும் எதிலும் இரவும் பகலும் சிவனையே கண்டு கொண்டிருக்கும் நிலையை அடைய வேண்டும் என்னும் எண்ணம் உண்டாகும்.

எண்ணிய எண்ணியங் செய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்.

*Sweet speech, free from meanness, will give the pleasure both in this world and in the next.* 98



# நடராசப் பத்து

- முருகவேபரமநாதன்

தொன்மை மிகு தமிழ், சைவம் இரண்டையும் கரைகண்டு வடமொழிநூற் பயிற்சியிலும் ஆழங் காற்பட்டவர்கள் யாரோ அவர்களே நிறைந்த கலைமாச் செல்வர்கள். அறிவுசீவிகள் கற்றுணர்ந்தடங்கிய கவிஞர், நிறைகுடங்கள். இந்த மேதைகள் நுண்மாண் நுழைபுலம் உடையோர். இப் பாரம்பரியம் கொடிவிட்டுப் படரின் இனம், மொழி, மண், சமயம் போன்ற பன்முக நெறிகளின் ஆளுமைகள் மெருகூட்டப்படும்; மேன்மையடையும். இச் செந்நெறிவழி தொல்காப்பியர்க்கு முன்னரே கால் கோட்பட்டு, கருத்துக்கள் பரிமாறப் பட்டன, பரிமளித்தன. இவ்விதமான தென்றற் சுவாசம் சுகமான, சுகாதாரமான, இதமான சமுதாயத்தைக் கட்டியெழுப்பவும், சீர்மை செய்யவும் கைகொடுத்தன. எனவே தான் காலத்துக்குக் காலம் புகழ் பூத்த புலவர்கள், புரவலர்கள், புனிதர்கள் உதித்து உத்தம வாழ்வுக்கு, உறுதியான நடைமுறைக்கு ஆற்றுப்படுத்தினர். அவர்கள் தந்த பக்தி நெறியிற் கரைந்து எழுந்த ஒரு சின்னஞ் சிறிய நூலே நடராசப் பத்து எனலாம்.

பத்து என்னும் பதப்பிரயோகம் பத்துப் பாடல்களை அமைப்பாகக் கொண்ட பதிகங் கட்கே உரித்தான அமைப்பாகும். எட்டுத் தொகையிலே பதிற்றுப் பத்து ஒரு சங்க இலக்கியமாகும். பத்து + பத்து = பதிற்றுப்பத்து. இப்படி எண்ணிலா இலக்கிய ஏடுகள் தமிழிலே நிறைய உண்டு. பிற் காலத்திலே அதிவீர ராம பாண்டியன் எழுதிய திருக்கருவைப் பதிற்றுப் பத்தந்தாதி ஓர் உயரிய பக்திப் பிரபந்தமாகும். இதற்குத் குட்டித் திருவாசகம் என்றோர் சிறப்புப் பெயரும் வழக்காற்றில் உண்டு. பத்து விதமான யாப்பமைவிற் பத்துக்களாயமைந்த நூறு பாடல்களைக் கொண்ட அந்தாதித் தொடையால் இயன்ற பக்திப் பனுவல் இது. திருவாசகப் பெருநூலிலே குயிற்பத்து, அதிசயப் பத்து, அற்புதப் பத்து, அடைக்கலப் பத்து, குழைத்த பத்து, சென்னிப் பத்து, பிரார்த்தனைப் பத்து, புணர்ச்சிப்பத்து என வருதல் காண்க. இவ் விலக்கிய மரபு திருக்குறள், தேவாரம், திவ்வியப் பிரபந்தம் என்பனவற்றிலும் விரவியுள்ளது. பத்து அல்லது பதிக அமைப்பின் பாடற்றொகை ஒன்றிரண்டு குறையலாம் கூடலாம். ஆழ்வார் பாசுரங்கள், சம்பந்தர், சுந்தரர் தேவாரங்களின் நிறைவு எண் பாசுரம் முத்திரைக் கவியாகவும் வருகின்றது. இப் புலமைப் பாரம்பரியத்தில் எழுந்த நடராசப் பத்து உயர்ந்த கவித்துவத்துடன், உள்ளத்தை ஈர்ப்பது. மனித வாழ்வின் நாளாந்த வாழ்வியலின் நடைமுறைச் சிக்கல்களும், சிந்தனையும் செறிந்து கொஞ்சம் இலகு நடையில் பயின்று வருவது. இது போல எழுந்த இன்னோர் விஷ்ணு பக்தர் பாடியதே கருடப்பத்து. இந் நடராசப் பத்து ஆசிரிய விருத்தப்பாக்க ளாலானது. அடி ஒவ்வொன்றும் பன்னிரண்டு சீர்களைக் கொண்டது. ஈற்றடிகள் எல்லாமே **ஈசனே சிவகாமி நேசனே எனை யீன்ற தில்லைவாழ் நடராசனே** என அமைந்துள்ளன. இப்பாடல்களைப்பாராயணம் பண்ணும் வழக்கம் பண்டுதொட்டே வழக் காற்றில் உண்டு. அவ்வளவு கனிவான, கருத்தான, கவர்ச்சிமிகு,

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

பிறர் கூறும் இன்சொல், தனக்கு இன்பம் தருவதைக் காண்கின்றவன், (தான் மட்டும்) பிறரிடத்தில் வன்சொல்லை வழங்குவது என்ன பயன் கருதியோ ? 99

பாடல்கள் இவை. இந்நூற்குரிய மேன்மையை இன்றைய இளந் தலைமுறையினர்க்கு அறிமுகம் செய்வதும், முதியவர்களின் நினைவுக்கு மீட்பதுமே இவ்வாக்கத்தின் கருதுகோளாகும்.

தில்லையிலே நடனமாடுகிறான் கூத்தப் பிரான். இவ்வாறு ஐந்து சபைகளிலே நடனம் நிகழ்கிறது. பஞ்ச கிருத்திய நடனம் செய்யும் ஆடல் இறைக்கு நடராசன் என்னும் திருநாமம் உண்டு. இவ்வாடல் அழகு நிர்த்ததரிசனம் வெகுநாகரிகமானது. எனவே உலகவர் கவனத்தைக் காந்தம் போல் ஈர்க்கிறது. இக் காட்சியைச் சொல்லோவியமாகத் தரும் பாடல் இது

மானாட மழுவாட மதியாடப் புனலாட
மங்கை சிவகாமியாட
மாலாட நூலாட மறையாட திரையாட
மறைதந்த பிரம்மனாடக்
கோனாட வானுலகு கூட்டமெல்லாமாடக்
குஞ்சர முகத்தனாடக்
குண்டல மிரண்டாடத் தண்டை புலியுடையாடக்
குழந்தை முருகேசனாட
ஞானசம்பந்தரொடு இந்திரர் பதினெட்டு
முனியட்ட பாலகருமாட
நரைதும்பையறுகாட நந்திவாகனமாட
நாட்டியப் பெண்களாட
வினையோட உனைப்பாட வெனைநாடி யிதுவேளை
விரைந்தோடி ஆடிவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராசனே

நடராசப்பத்து - 2

திருப்புகழிலே வருகின்ற அதல சேடனாராட என்னும் பாடலையும் சிதம்பரநாதர் பதிகத்தில் அமைந்த விரித்த செஞ்சடையாட என்னும் பாடலையும் சேர்த்து ஒப்பீடு பண்ணி, சைவநீதி வாசகர்கள், வாய்க்கும் தருணம் வரும் போது படித்துப் பாருங்கள் (சுருக்கம் கருதி இங்கே தருதல் பொருந்தாது)

உலகியலிலே மனிதன் அலுத்துச் சலித்துப் போகிறான். எனவே வாழ்விற் சலனமும், விரத்தியும், அவனையறியாமலேயே புகுந்து ஒரு வெறுப்புணர்வையும் கொண்டு வந்து விடுவதும் சகசமே. இந்நிலையிற் தம் மனதைக் கல்லாய், இரும்பாய், மரமாய், முருடாய், மூங்கிலாய் உரு வகித்தனர், உவமித்தனர் பலர். மணிவாசகர் தொட்டுத் தாயுமானவர் வரை இதைப் பார்க்கலாம். சிலவேளை நம்மை யறியாமலே ஆண்டவன் மீது பழியைப் போட்டும் விடுகிறோம். நம் கர்மபந்தத்தினால் வந்த வினைப் பயன்களை அனுபவிக்க, தாங்க, தரிக்க, நாதியற்று இறைவனையே கல்மன முடையவன், இரும்பு நெஞ்சம் உடையவன் என ஒரு பிடிப்போடு ஏசவும் பேசவும் செய்கிறோமே. ஆற்றாமை மிகுகையில் கண் கெட்ட தெய்வமே என ஏசவும் பேசவும் செய்கிறோம். இவற்றுக்குப் பதிலாக இறைவா "எதையுந் தாங்கும் இதயம் தருவாயாக" என இரந்து நிற்கத் தவறி விடுகிறோம். இந் நிலைக்களத்திலே இறைவ னோடுற்ற எல்லை யற்ற வாரப் பாட்டில் எழுந்த பாடலைப் படிக்கையில் எம்மோடு சார்த்திப் பார்க்கிறது மனம்.

இன்னமுஞ் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ
இதுவு மக்கழகு தானோ
என்னென்ன மோகமோ இதுவென்ன கோபமோ
இதுவுமுன் செய்கைதானோ
இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான்விடுவனோ
உன்னை விட்டெங்கு சென்றாலும் விழலாவனோ
உனையடுத்துங் கெடுவனோ
ஓகோவிது வுன்குற்றமென் குற்றமொன்றுமிலை
உற்றுப் பார் பெற்ற ஐயா
என்குற்ற மாயினும் உன்குற்றமாயினும்
இனியருளளிக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராசனே

நடராசப்பத்து - 9

*Why does he use harsh words who sees the pleasure which sweet speech yields?* 99

திருப்புகலூரிலே முருகநாயனார் மடத்திலே அடியவர்களோடு திருஞானசம்பந்தப் பிள்ளையார் வீற்றிருந்தார். சம்பந்தப்பிள்ளையாரைக் காணும் ஆவலால் அப்பரடிகள் முருகநாயனார் மடத்திற்கு வந்தார். இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கினர் சம்பந்தப் பிள்ளையார் அப்பரடிகளிடம் திருவாரூரிற் திருவாதிரை விழா எப்படி நடை பெற்றது ? என வினவினார்.

முத்துவிதானம் மணிபொற்கவரி முறையாலே
பத்தர்களோடு பாவையர்சூழப் பலிப்பின்னே
வித்தகக்கோல வெண்டலைமாலை விரதிகள்
அத்தன்ஆரூரில் ஆதிரைநாள் அதுவண்ணம்

என்று அப்பரடிகள் பதிகம் பாடினார்.

வாழ்ந்து போகீரோ எனப் பேசும் பாணியில் இறைவன் மீதூர்ந்த அன்பை உரிமையுடன் பேசுமாறு போல இப்பாடலிலே மனவெப்பியாரம் பேசப்பட்டாலும், உள்ளுணர்வுமிக்கூர்ந்து இறைவனோடு பிணங்கியும் இணங்கியும் நிற்கும் ஊடலும், கூடலும் நிறைந்த பாவம் மிக உயர்வானதாகும். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் நிறைந்து நிரந்து நிற்கும் பரம்பொருள் மயமான இறை தத்துவத்தை வார்த்தையில் வடிப்பதோ, அகப்படுத்துவதோ, பேசுவதோ முடியாத காரியம் எனினும் இன்றுவரையும் யாதுமாய் நின்ற பரம் பொருளாம் கூத்தப்பிரானைப் பாடிப் பரவி மகிழும் ஒரு மரபு எம்மோடு ஒட்டி உற வாடுவதைக் காண்கின்றோம். இந் நிலைப் பாட்டில் ஈசன் இங்குமங்கும் எங்குமாய் நிற்கிறான்.

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறைநான்கின் அடிமுடியும் நீ
மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும் நீ
மண்டலம் இரண்டேழும் நீ
பெண்ணும்நீ ஆணும்நீ புல்லுயிர்க்குயிரும்
பிறவியும் நீ ஒருவ நீயே !
பேதாதி பேதம் நீ பாதாதி கேசம் நீ
பெற்றதாய் தந்தை நீயே
பொன்னும்நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும்நீ
போதிக்க வந்த குரு நீ
புகழொணாக்கி ரகங்களொன்பதும் நீ இந்தப்
புவனங்கள் பெற்றவனும் நீ
எண்ணரிய ஜீவகோடிகளீன்ற அப்பனே
என்குறைகளார்க் குரைப்பன்
ஈசனே சிவகாமி நேசனே எனையீன்ற
தில்லைவாழ் நடராசனே !

நடராசப்பத்து - 1

யாரொடுநோகேன் ஆர்க்கெடுத்துரைப் பேன் என மணிவாசகர் பேசுவது போன்று என் குறைகள் யார்க் குரைப்பேன் என இறைவ னோடு சம்வாதம் செய்வது போன்ற பாணியில் அமைந்தது இப்பாடல்.

இவ்வாறு இரக்கும்பாங்கிலே, இவ்வுல கியலிலே, நாம் இறை நாட்டங் கொண்டு செய்யும் கிரியைகளும், தப செப விரதயாத் திரைகளும், தீர்த்தாடனமும் எமனோலைக்கு முன்னில்லாது.

தந்தை தாய் தமர் தாரம் சந்தையிற் கூட்டம். ஒருநாட் சந்தைக் கூட்டமே நம் மனித வாழ்வு. புகழும், போற்றலும், உயர்வும் என்ன பயன் தரும். எனவே யான் திருவடிகளே சரணம் என்று நம்பி வந்தேன். நின்கடைக்கண் பார்வை

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

இனிய சொற்கள் இருக்கும் போது அவற்றைக் கூறாமல் கடுஞ்சொற்களைக் கூறுவது, கனிகள் இருக்கும் போது காய்களைப் பறித்துத் தின்பது போன்றது. 100

யொன்றே போதும். ஈசனே சிவகாமி நேசனேயெனச் சரணம் அடைவதையே காட்டும் கருத்துமிகு கவிதையை இசையுடன் பாடின் எம் நெஞ்சம் கரைந்து ஓடும்.

தாயாருந்தென்ன தந்தையிருந்தென்ன
தன்பிறவி யுறவு கோடி
தனமலைகுவித் தென்னகன பெயரெடுத் தென்ன
தாரணியை யாண்டுமென்ன
சேயர்க ளிருந்தென்ன குருவாயிருந்தென்ன
சீஷ்யர் களிருந்து மென்ன
சித்து பலகற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்னபலன் எமனோலை
ஒன்றைக் கண்டு தடுக்க உதவுமோ
இதுவெலாம் சந்தையுற வென்றுதான்
உன் னிருபாதம் பிடித்தேன்
யார்மீது மன்பிருந்தாலு முன்கடைக்கண்
பார்வை யதுபோதும்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லை வாழ் நடராசனே.

நடராசப்பத்து - 7

இம்மானிடச் சட்டை தாங்கிப் பூமியிற் பிறந்து படும் பாடுகளை உன்னுங்கால் யாரை நோவது எனப் பட்டினத்தார் பெரிதும் நொந்தார். இப்படி நொந்தாவதென்ன, அழுதாவதென்ன, அவரவர் செய்த தீவினை நல்வினைக்கமைய அனுபவங்களைத் துன்பியலாகவும், இன்பிய லாகவும் அனுபவித்தே தீரவேண்டும். எனவே பிறவியென்னும் அலையோசை ஒழியவும், உன்பாதபங்கயங்கள் சேரவும் வழிகாட்டும் ஒளிவிளக்கே என பரிந்து பேசுகிறார். இதைப்பாடியவர்:-

அன்னை தந்தைகளெனை யீன்றதற் கழுவனோ
அறிவிலாததற் கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசைமுன்றுக் கழுவனோ
முன்பிறப்பென்னவினை செய்தனென் றழுவனோ
என் மூடவறிவுக் கழுவனோ
முன்னிலென் வினைவந்து மூளுமென் றழுவனோ
முத்திவரு மென்றுணர்வனோ
தன்னைநொந்தழுவனோ உன்னை நொந்தழுவனோ
தவமென்ன வென்றழுவனோ
தையலர்க் கழுவனோ மெய்வளர்க்க அழுவனோ
எல்லாமுரைக் கவருவாய்
யீசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராசனே !

நடராசப்பத்து - 9

கடிவாளத்தையும் மீறி ஓடும் குதிரைபோல, வேட்கையோடு விரையும் வேட்டை நாய் போல, கட்டுக்கடங்காதயானை போலப் பாயும் மனக் குரங்கையடக்கி, புலன்வழிச் செல்லவிடாது, சன்மார்க்க நெறிக்கு மாற்றும், மனித அறிவின் முதிர் நிலையில் ஒவ்வொரு ஜீவனும் தன்னை வழிப்படுத்தப் பாடுபடும் மனித வாழ்வுக்குச் சமயமும், சார்ந்த அறிவுறுத்தல்களும் எம்மைச்செம்மைப்படுத்தி, புனித வாழ்வைப் பூமியில் மேற்கொள்ளப் பக்தி நெறியும், இலக்கியங்களும், பெரியோர்களும் உவப்பான சாதனங்களாகும். இம் மார்க்கத்திற் தம்மை வழி நடத்தி நிறையனுபூதி கண்ட அருளா ளர்களின் அனுபூதி வெளியீடுகள் நம்தமிழில் நிறைய உண்டு. இவற்றைப் படிப்பதும், உள்வாங்குவதும் தொடர்வதும், நம்மை வழி நடத்துவதும், தொண்டு செய்வதும் நல்ல மனித விழுமியங்களை நிச்சயம் தரும். காலத்தின் மாற்றப் புயல் எம்மைச் சாவாமற் காக்கவும், எதிர்க்கவும், பொன்னான வாழ்வை மேற் கொள்ளவும் எமது சமயம் சார் முயற்சிகளை எம்மோடு இணைத்து எதிரது காப்போம்.

*To say disagreeable things when agreeable are at hand, is like eating unripe fruit when there is ripe. 100*

# திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும்

- குப்பிழான் ஏ. அனுசாந்தன்

மார்கழி மாதத் திருவெம்பாவை விரதக் காலங்களிலே நம் சைவாலயங்களெங்கணும் அதிகாலை வேளையிலே விசேட பூஜைகள் நடைபெற்று, திருவாசகப் பதிகங்களாகிய திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை என்பன ஓதப்பட்டுவருகின்றன. திருவாசகப் பனுவல்களனைத்தினாலுமுணர்த்தப்பட்டுள்ள சைவ ஞானவுண்மைகள் முழுமையும் இவ்விரு பதிகங்களானு முணர்த்தப் பட்டுள்ளன. எங்ஙனமெனிற் கூறுதும் -

நாம் உடல்தாங்கிகள் என்ற வகையில் உருவசொரூபிகள், உடல் சார்ந்த இளைப்பு நம்மைப் பள்ளியிலமர்த்தும், இளைப்பு நீக்கம் பள்ளியெழ வைக்கும். இதற்கெதிர் இறைவன் அருவசொரூபி. ஆதலின் அவற்கு அந்நிலை மைகளிருத்தல் சாலாது. உடலிலுள்ள உயிரில் (உயிராய்) உறையும் இறைவன். அவ்வுயிரின் பந்தநிலைக் காலமெலாம் அதனிடத்தில் தன் இருப்புத் தோன்றுமளவுக்குப் பிரகாசமாயிருப்ப தில்லை. பந்தநிலைக் காலத்தில் உயிருக்கு இன்றியமையாத கன்ம பல போகங்களில் அதனை அழுத்தும் நோக்கமாக இறைவன் புரியும் ஒரு மறை நிலையுபகாரம் அது. மீள, உயிரின் கன்ம பல போக வொழிவில் உயிருக்கும் உலகமயல் தீரும் எல்லையில் இறைவனின் மறைநிலையுபகாரமும் முற்றுப் பெறும். அதன்மேல் அவரது உபகாரம் வெளிப் படுநிலையுபகாரம் ஆகும்.

இதற்கிணங்க இறைவனின் மறை நிலையுபகாரம் அவற்குப் பள்ளியமர்தலும், மீளநிகழும் வெளிப்படுநிலையுபகாரம் பள்ளியெழுதலும் ஆகும். ஆகவே திருப்பள்ளி யெழுச்சிப் பதிகப் பாடல்கள் தோறும் **"பள்ளியெழுந்தருளாயே"** எனவுள்ள வேண்டுதல், இறைவனிடம் "மறைநிலை யுபகாரப் போக்கிலிருந்து வெளிப்படுநிலை யுபகார நிலைக்கு முகஞ் செய்வாயாக என வேண்டுவதாக அமையும்". இவ்வாறுள்ளது திருப்பள்ளியெழுச்சியின் மகத்துவம். தொடர்ந்து -

திருப்பள்ளியெழுச்சி வைகறைப் பொழுதில், விடிவெள்ளி தோன்றுந் தறுவாயிலும் திருவெம்பாவை அருணோதய காலத்திலும் ஓதப்பட்டுவரும் சூட்சுமத்தை அறிவோம்.

புறவுலகில் நாமெல்லோரும் இருள் படர்ந்த காலத்தில் நன்கு உறங்குகிறோம். இவ்வாறே ஆத்மாவும் ( இருவினையொப்பு நேருமட்டும்) ஆணவத்தில் உறங்கி நிற்கிறது. புறவுலகில் இருள் நீங்குவதற்கு முன்னதாக இருள் நீங்கியும் நீங்காமலுள்ள **"வைகறை"** தோன்றுகிறது. இதே போன்று ஆத்மீகத்திலும் **"கேடும் ஆக்கமுங் கெட்ட நன்னிலை"** உருவாகும். இதனைத் தத்துவபரிபாஷையிலே இருவினையொப்பு என்பர். வைகறைப் போழ்திலே கீழ்வானில் விடிவெள்ளி தோன்றும். இதே போல் இருவினையொப்பு நேர்ந்த ஆத்மாவினிடத்திலே குருவருள் கைகூடும்.

விடிவெள்ளி தோன்றிய பின்னர் கிழக்கு வானிலே அருணோதயமுண்டாகும். இது ஜீவனிலே திரவருட்சக்தி பதிதலை ஒக்கும்.

அருணோதய காலத்திலே சேவல், குருவி முதலாகிய பறவைகளின் ஒலிகளும், சங்கு, மணி முதலியவற்றின் ஓசைகளுங் கிளம்பியிசைக்கும். இது திருவருள் பதியப்பெற்ற ஆத்மா, தனக்குள்ளே தன் அகச்செவிகளாற் கேட்டுணரும் பரநாதத் தைக் குறித்து நிற்கும்.

அருணோதயமானது வானிலே ஒளிமிகும். இஃது திருவருள் பெற்ற ஆத்மாவிடம் உண்டாகும் பூரண சிவஞானப் பிரகாச மாகும். எனவே"தான் **"திரோதானசுத்தி"**எனுந் தலைப்பிலுள்ள திருப்பள்ளி யெழுச்சியை விடி வெள்ளி தோன்றும் வைகறைப் பொழுதிலும் **"சக்தியைவியந்தது"** எனுந்தலைப்பிலான திருவெம் பாவையை அருணோதய வேளையிலும் ஓதுதல் வழக் கமாகியுள்ளது.

சிவசிவ !

## நடேசர் அபிஷேகம்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்கழி | - | திருவாதிரை | - | திருவனந்தல் |
| மாசி | - | பூர்வ சதுர்த்தசி | - | காலைச்சந்தி |
| சித்திரை | - | திருவோணம் | - | உச்சிக்காலம் |
| ஆனி | - | உத்தரம் | - | சாயரட்சை |
| ஆவணி | - | பூர்வ சதுர்த்தசி | - | இரண்டாங்காலம் |
| புரட்டாதி | - | பூர்வ சதுர்த்தசி | - | அர்த்தசாமம் |

## சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

தனிப்பிரதி

இலங்கையில் ரூபா 25.00

ஆண்டொன்றிற்கு

ரூபா 250.00

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுன் 10 அல்லது US$15.

*சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.*

சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :

C.NAVANEETHAKUMAR
42, JANAKI LANE,
COLOMBO - 04
SRI LANKA.



# திருவாதிரை நாள்

– செ. நவநீதகுமார்

சிவ விரதங்களுள் திருவாதிரை விரதமும் ஒன்றாகும். இருபத்தேழு நட்சத்திரங்களுள் திரு என்று சிறப்பாகக் கூறப்படுபவை இரண்டு. ஆதிரை, ஓணம் என்ற இரு நட்சத்திரங்களுமே திருவாதிரை, திருவோணம் எனப்படும். திருவாதிரை சிவபெருமானுக் குரியது. திருவோணம் விஷ்ணுவிற் குரியது. சிவபெருமானை ஆதிரை நாயகன் என்றும் ஆதிரையான் என்றும் அழைப்பர்.

திருவாதிரை விரதம் சூரியபகவான் தனுர்ராசியில் சஞ்சரிக்கும் காலமாகிய மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தன்று அனுட்டிப்பதாகும். விரதமனுட்டிப்பவர் திருவாதிரையன்று அதிகாலையில் துயில்விட்டெழுந்து நித்திய கருமம் முடித்துச் சிவாலயத்திற்கு செல்லவேண்டும். அங்கு சிவலிங்கப் பெருமானுக்கும் நடராசப் பெருமானுக்கும் அபிஷேகம், பூஜை செய்வித்து நெய்விளக்கேற்றி வழிபடல் வேண்டும். இவ்விரதத்தை தரிசிக்க முத்தியளிக்கும் தலமான சிதம்பரத்தில் அனுட்டிப்பது உத்தமமாகும்.

சுப்பிரமணியப் பெருமான் இவ்விரதத்தை அனுட்டித்துக் கைலாயபதியின் அனுக்கிரகம் பெற்றுக் கைலையங்கரியில் எழுந்தருளினார். வியாக்கிரபாத முனிவர் இவ்விரதத்தை நோற்று தவவலிமை பெற்றுக் கண்ணனின் தீட்சா குருவான உபமன்யு முனிவரை மகனாகப் பெற்றார். மேலும் ஆனந்த தாண்டவமூர்த்தியாகிய நடராசப்பெருமானின் திவ்விய நடனக் காட்சியைக் கண்குளிரத் தரிசித்துச் சீவன் முத்தரானார்.

பதஞ்சலி முனிவரும், கார்க்கோடகன் என்ற சர்ப்பமும் இவ்விரதத்தை அனுட்டித்துக் கூத்தபிரானின் திருநடனக் காட்சியைக் கண்டின்புற்று அதன் பயனாகப் பிறப்பு இறப்பற்ற முத்திநிலை அடைந்தனர்.

விபுலர் என்ற வேதியர் திருவாதிரை விரதத்தை நோற்றுச் சிவபெருமானின் அனுக்கிரகம் பெற்று இவ்விரத பலத்தாற் பருவுடலுடனே திவ்விய விமானத்தில் ஏறிக் கைலைக்குச் சென்றார். அங்கு இறைவனைச் சேவித்துப் பூவுலகிற்கு மீண்டார். பின் மனைவி மக்களோடும் சகல ஐஸ்வரியங்களுடனும் வாழ்ந்து சிவலோகப் பேறு பெற்றார்.

ஊர்திரை வேலையுலாவும் உயர்மயிலைக்  
கூர்தரு வேல்வல்லார் கொற்றங்கொள் சேரிதனில்  
கார்தரு சோலைக் கபாலீச்சரம் அமர்ந்தான்  
ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்.

*திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்*

# சைவ நெறிப் பாடமும் பயிற்சியும்

## பொதி சோறு பெற்றமை

### பாடப்பொழிப்பு

சமய குரவர்

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

↓

* கொடிய சூலை நோயைத் திருநீறு பூசித் தீர்த்தார்.
* சிவ சின்னங்களின் பெருமையை நிலைநாட்டியவர்.
* பக்திச் சுவையான பதிகங்களைப் பாடியவர். தன்னைத் தாக்கவந்த தீமையை கூடத்தேவாரம்
* படி நன்மையைக் கண்டவர்.

↓

சைவநெறியே மெய்நெறி எனும் முடிவுக்கு வந்தவர்

↓

பணி

↓

இவரது பணி உழவாரப் பணியாகும். இயற்பெயர் மருணீக்கியார் மறுபெயர்கள் வாகீசர், சொற்கோ, தாண்டகவேந்தர், அப்பர்

திருச்சிராப்பள்ளி மாவட்ட திருப்பைஞ்ஞீலித் தலம் நோக்கி செல்லும் போது பசியும் தாகமும் ஏற்பட்டது. தனது பசியைப் பொருட்படுத்தாது சென்றார்.

↓

அப்போது சிவபெருமான் பிராமண வடிவு கொண்டு சோற்றுப் பொதியுடன், மரநிழலையும் குளத்தையும் உருவாக்கி நின்றார்.

"சாந்தையூரான்"

↓

திருநாவுக்கரசரைக் கண்டபிராமணர் "வழி நடந்து மிகவும் களைத்துப் போனீர்கள். என்னிடம் கட்டமுது உள்ளது. இதை சாப்பிட்டுக் குளத்திலே தண்ணீர் குடித்து ஆறியிருந்து போகலாம் எனக் கூறினார்."

↓

சாப்பாபிட்ட பின்
பிராமணர் அப்பரை நோக்கி "இனி எவ்விடம் போவதாக உத்தேசம்" எனக் கேட்டார். அப்பர் திருப்பைஞ்ஞீலி எனக்கூறினார்.

↓

திருப்பைஞ்ஞீலிக்குச் சமீபமாகச் சென்றதும் பிராமண வேடம் தாங்கிய சிவபெருமான் மறைந்தருளினார்.

↓

இறைவன் நீலகண்டர் மீதும் இறைவி விசாலாட்சி மீதும் "உடையர் கோவணம்" எனும் தேவாரத்தை பாடினார். இப்பதிகம் திருக்குறுந்தொகையாக ஐந்தாம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது.

↓

உடையராக கோவணம் ஒன்றுங் குறைவிலார்
படைகொள்பவரிடம் சூழ்ந்தது திருப்பைஞ்ஞீலி
சடையையும் கங்கையையும் தரித்தசதுரரை
அடைய வல்லவர்க்கு இல்லை அவலமே
எனப்பதிகம்பாடினார் அப்பர்.

## செயற்பாடு

I. **கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சமய குரவர் நால்வரின் பெயர்களைத்தருக?

..........................................................

2. கொடிய சூலை நோய் எவ்வாறு தீர்ந்தது?

..........................................................

3. திருநாவுக்கரசரின் பணி யாது?

..........................................................

4. திருநாவுக்கரசரின் இயற்பெயர் என்ன?

..........................................................

5. திருநாவுக்கரசரின் மறுபெயர்கள் எவை?

..........................................................

6. திருநாவுக்கரசர் எத்தலத்தை நோக்கிச் சென்றார்?

..........................................................

7. சிவ பெருமான் எவ்வடிவத்தில் நாவுக்கரசரை சந்தித்தார்?

..........................................................

8. பிராமணராக வந்த சிவபெருமான் செய்த அற்புதங்கள் எவை?

..........................................................

9. திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் வேளையில என்ன நிகழ்ந்தது?

..........................................................

10. இறைவன் நீலகண்டர் மீதும் இறைவி விசாலாட்சி மீதும் பாடிய தேவாரப்பதிகம் யாது?

..........................................................



## விடைகள்

I. 1) திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர்.

2) கொடிய சூலை நோயைத் திருநீறு பூசித் தீர்த்தார்.

3) உழவாரப் பணி

4) மருணீக்கியார்.

5) வாகீசர், அப்பர், சொற்கோ, தாண்டகவேந்தர்.

6) திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள திருப்பைஞ்ஞீலி நோக்கி சென்றார்.

7) பிராமண வேடத்தில்.

8) பொதி சோறு கொடுத்தது.
தாகம் தீரத் தண்ணீர் கொடுத்தார்.
மரநிழலையும் குளத்தையும் உருவாக்கினார்.

9) சிவபெருமான் பிராமணராக வந்த அப்பருக்கு உணவும் நீரும் கொடுத்து மறைந்தார்.

10) "உடையர் கோவணம்"



பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
சிந்தனைக் கும்அரி யாயெங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்துறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றாரணங் கின்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேயுன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

தொடர்ச்சி 11 ம் பக்கம்

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| தை | 1 | 14.1.2001 | ஞாயிறு | தைப்பொங்கல். உத்தராயணபுண்ணிய காலம் காலை 8.02 முதல் பகல் 2.26 வரை |
| | 3 | 16.1.2001 | செவ்வாய் | தைச் செவ்வாய் - வைரவ விரதம் |
| | 5 | 18.1.2001 | வியாழன் | திருநீலகண்டர் குருபூசை |
| | 7 | 20.1.2001 | சனி | ஏகாதசி விரதம் |
| | 8 | 21.1.2001 | ஞாயிறு | பிரதோஷ விரதம் |
| | 11 | 24.1.2001 | புதன் | அமாவாசை விரதம்<br>பாசுபத விரதம் |
| | 14 | 27.1.2001 | சனி | அப்பூதியடிகள் குருபூசை |
| | 15 | 28.1.2001 | ஞாயிறு | சதுர்த்தி விரதம் |
| | 17 | 30.1.2001 | செவ்வாய் | ஷஷ்டி விரதம்,<br>கலிக்கம்பர் குருபூசை |
| | 20 | 2.2.2001 | வெள்ளி | கார்த்திகை விரதம் |
| | 22 | 4.2.2001 | ஞாயிறு | கண்ணப்பர் குருபூசை<br>பீம ஏகாதசி விரதம் |
| | 23 | 5.2.2001 | திங்கள் | அரிவாட்டாயர் குருபூசை |
| | 24 | 6.2.2001 | செவ்வாய் | பிரதோஷ விரதம் |
| | 25 | 7.2.2001 | புதன் | பூரணை விரதம்,<br>தைப்பூசம் |
| | 29 | 11.2.2001 | ஞாயிறு | சங்கடஹர சதுர்த்தி விரதம்,<br>சண்டேசுரர் குருபூசை |

**Regd. No. QD/22/ News 2000** இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் 211 A, அல்விஸ் ரவுண், வத்தளை தமயந்தி எக்ஸ்போட் பிறைவேற் லிமிடெட்டில் அச்சிட்டு 25.12.2000. இல் வெளியிடப்பட்டது.